# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62:10**

**Translated from**
**BS#948**
**May-June 2025**

**பொருளடக்கம்**

✡ ஆவியினால்–ஜெனிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்த ஊழியர்கள் பரிசுத்த ஆவியையுடையவர்களாயிருக்கிறார்கள்.... 2

✡ ஆயிர வருஷ யுகம் பல தீர்க்கதரிசனங்களில் ஒன்று ........... 6

✡ தேவனால் அடிக்கப்பட்டு வாதிக்கப்பட்டார்.. 14

**BS Tamil Version - 93** **2025**

# ஆவியினால்–ஜெனிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்த ஊழியர்கள் பரிசுத்த ஆவியையுடையவர்களாயிருக்கிறார்கள்

Non-Spirit-Begotten Consecrated Servants Do Have The Holy Spirit

**''நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்''** (எபே. 1:13 ரோதர்ஹாம்).

அநேக வேதாகம மாணாக்கர் குழுக்களுடைய புரிந்து கொள்ளுதலின் படியான அபிப்பிராயம் என்னவெனில், ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாத யேகோவா தேவனுடைய ''யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்த ஊழியர்கள்,'' அவருடைய மனப்பான்மை என்னும் அர்த்தத்தில் தங்களுடைய இருதயத்திலும், மனதிலும், சித்தத்திலும், ஆவியினுடைய சாட்சியிலும் கூட பரிசுத்த ஆவியைக் கொண்டிருக்கவில்லை என்பதாகும். (ரோம. 8:16). இது ஒரு மாபெரும் தவறாகும்! மூப்பரான பாத்திரவான்களைப் போலவே, ''யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்பவர்களும்,'' பிரகாசிப்பிக்கப்படுதல், இருதய அனலூட்டப்படுதல் மற்றும்ஆவியின் ஊக்கமடைதல் என்ற அர்த்தத்தில் தங்களுடைய இருதயம், மனம் மற்றும் சித்தத்தில் பரிசுத்த ஆவியைக் கொண்டுள்ளனர், இருப்பினும் ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதல் என்ற கருத்தில் அல்ல. உதாரணமாக, **''உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்''** (சங். 51:11) என்று யேகோவா தேவனிடம் ஜெபித்த தாவீதின் விஷயத்திலிருந்து மூப்பரான பாத்திரவான்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர் என்பது தெளிவாகிறது.

ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாத இந்த பிரதிஷ்டை–யாளர்கள், நடைமுறையில் ஆவியுடனேகூடச் சாட்சியிடுவதாகிய ஏழு அம்சங்களிலும் பரிசுத்த ஆவியைக் கொண்டுள்ளனர். இந்த ஏழு அம்சங்களும் சுருக்கமாக பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: (1) தேவனுடைய வார்த்தையின் ஆழமான காரியங்களை மதித்துணர்ந்து புரிந்துகொள்ளுதல் (2) பரலோகத்திற்குரியவைகளின் விருப்பங்கள், அல்லது பூரண மனிதனின் நம்பிக்கை–களுடன் தொடர்புடையவைகள் (3) ஊழியத்திற்கான வாய்ப்பு–கள், (4) கிறிஸ்துவின் குணசாயலில் வளர்ச்சியடைதல், (5) கிறிஸ்தவர்களாக நீதியினிமித்தம் துன்பப்படுதல், (6) தவறுகளுக்கான சிட்சைகள் மற்றும் (7) பாவத்தின் ஆதிக்கம் இன்னும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக் கையில், தவறானதைச் செய்வதற்கான சோதனைகளின் மத்தியில் குணாம்சத்திற்கான பரீட்சைகள்.



**''நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப் பட்டீர்கள்''–எபே.1:13** (NIV).

ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாத இந்த அர்ப்பணிப்புள்ள யேகோவா தேவனுடைய ஊழியர்கள் மூப்பரான பாத்திரவான்கள் கொண்டிருந்த அதே பரிசுத்த ஆவியின் சாட்சியைப் பெறுகிறார்கள். எனவே, ஆவியின் சாட்சியத்தின் ஏழு அம்சங்களில் உள்ளவை அனைத்தும் இந்த அர்ப்பணிப்புள்ள குமாரர்கள், பொருத்தமான சிநேகிதர்கள், ஊழியர்கள் மற்றும் வருங்கால தேவனுடைய குமாரர்–களுக்கும் வழங்கப்படுகின்றன (ரோம. 8:16). மூப்பரான பாத்திரவான்கள் அவர்களுடைய நாட்களின் அனைத்து காலத்துக்கு ஏற்ற சத்தியங்களையும் பெற்றது போல், நம்முடைய நாட்களில் இந்த பிரதிஷ்டை செய்த ஊழியர்களும் பெருமளவிலான காலத்துக்கு ஏற்ற சத்தியத்தைப் பெறுகிறார்கள்; நிச்சயமாக, இது மிகவும் அதிகமாகவே உள்ளது. அவர்கள் யேகோவா தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பதால், இப்போதுள்ள அனைத்து விதமான ஏற்றகால சத்தியத்தையும் அவருடைய விசேஷித்த ஊழியர்கள் மூலமாக பெற்றுக்கொள்வது அவர்களுடைய சிலாக்கியமாயிருக்கிறது. அனுபவத்தின் உண்மைகள் இதனை மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்த ஊழியர்கள் தேவனுடைய வார்த்தையின் ஆழமான விஷயங்களைக் காண முடியாது என்று சிலர் ஆட்சேபிக் கிறார்கள். ஏற்றகால சத்தியம் அனைத்து பிரதிஷ்டை–

**COURTESY BY :**
**The Bible Standard** -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates: One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

யாளர்களுக்கும் உரியது என்று வேதாகமம் எல்லா காலங்களிலும் கற்பிக்கிறது என்பதாக இதற்கு நாங்கள் பதிலளிக்கிறோம். இதனால்தான் பழைய ஏற்பாட்டு காலங்களில் மூப்பரான பாத்திரவான்கள் தங்கள் காலத்திற்கு உரிய அனைத்து ஏற்றகால சத்தியத்தையும் பெற்றார்கள். கிறிஸ்துவினுடைய மத்தியஸ்த ஆட்சியில், ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாத நிலையிலான பாத்திர வான்களும், இழந்துபோனவைகளை திரும்பப்பெற்றுக் கொள்ளும் வகுப்பினரும் இறுதியில் வேதாகமத்தில் உள்ள எல்லாவற்றையும் புரிந்துகொள்வார்கள். (ஏசா. 11:9; 29:18, 24; 35:5; எரே. 31:34). ஏன்? ஏனென்றால், அவர்–களுடைய காலத்தில் ஏற்றகால சத்தியத்தைக் கண்டறிந்து கொள்வது எப்போதுமே பிரதிஷ்டை செய்தவர்களின் பாக்கியமாகும்.

நமது அன்பான ரசல் போதகர் இந்த அறிக்கையை தெரிவித்திருக்கிறார்: தொடர்ந்து நிறைவேறி வருகின்ற யுகங்களைக் குறித்ததான சத்தியங்கள் இருக்கின்றன, விளக்கு வெளிச்சத்தில் நடந்தோமானால், நாம் அவற்றை அறிந்துகொள்வோம்! கிறிஸ்தவ குணாம்சத்தின் கிருபை–களை வளர்த்துக் கொள்வது மட்டுமல்லாமல், சத்தியத்தை, குறிப்பாக ஏற்ற காலத்தில், யுக மாறுதலின் போது ஆண்டவர் வந்திருத்தல் பற்றிய சத்தியத்தை பகுத்தறிவதற்கு உதவும் இருதய மனப்பான்மையை தொடர்ந்து பாதுகாக்கவும் அவைகள் அறிவுறுத்துகின்றன.

இதை முழு கவனத்துடன் படியுங்கள்: 1 கொரிந்தியர் 2:9-16-ல் உள்ள பவுல் அப்போஸ்தலரின் வார்த்தைகள், ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாதவர்கள் ''**தேவனுடைய ஆழமான காரியங்களை**'' புரிந்துகொள்ள முடியும் என்பதை மறுக்கிறது, இவை பரம அழைப்புக்கான பொதுவான அழைப்பு திறந்திருந்த காலத்திற்கு என்று வரையறுக்கப்பட்டு அந்த காலத்தில் ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதலும் பிரதிஷ்டை செய்தலும் ஒரே அர்த்தத்தை உடையதாகவே–யிருந்தது, எனவே பிரதிஷ்டை செய்தவர்கள் அனைவரும் பின்னர் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டனர். பரம அழைப்புக்கான அழைப்பு திறக்கப்படுவதற்கு முன்பு இது அவ்வாறாக இல்லை. எவ்வாறாயினும், பொதுவான அழைப்பு முடிவுற்ற பிறகு, பவுலின் பொருத்தமான வார்த்தைகள் எல்லோருக்கும் பொருந்தாது. ஆனால் எப்போதும் பொருந்தக்கூடிய நியமம் என்னவென்றால், பிரதிஷ்டை செய்தவர்கள் மட்டுமே ஏற்ற கால சத்தியத்தைக் காண முடியும். எனவே, ''யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்தவர்கள்'' (வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள்) தேவனுடைய சிநேகிதர்கள், ஊழியர்கள் மற்றும் வரவிருக்கும் குமாரர்கள் என்பதற்கு சாட்சியாக ஆழமான விஷயங்களில் ஏற்றகால சத்தியத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

மூப்பரான பாத்திரவான்களுக்கு செய்தது போலவே, தம்முடைய அனைத்து ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்த ஊழியர்கள் அனைவருக்கும் ராஜ்–யத்தைக் குறித்தான சத்தியத்தின் செய்தியை பரப்புவதற்கான ஊழிய வாய்ப்புகளை யேகோவா தேவன் வழங்குகிறார். (மத். 21:28; ரோம. 12:1; கலா. 6:9, 10). மூப்பரான பாத்திரவான்களின் விஷயத்தில் இருந்தது போலவே (எபி. 11:33), ஆவியின் சாட்சியமாக தேவன் அவர்களைத் தம்முடைய சாயலில் வளரச் செய்கிறார் (ரோம. 8:9, 2 பேது. 1:5-11; 1 யோவா. 2:5, 6; 3:14, 16, 17), எனினும் அவர்கள் மூப்பரான பாத்திரவான்கள் கொண்டிருந்ததை விட வளர்ச்சிக்கான பல நன்மைகளைக் கொண்டிருக் கின்றனர்.

***பிரதிஷ்டை செய்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாதவர்கள், #1-தேவனுடைய வார்த்தையின் ஆழமான காரியங்களை மதித்துணர்ந்து புரிந்து கொள்ளுதலைக் கொண்டுள்ளனர்.***

மூப்பரான பாத்திரவான்களைப் போலவே (எபி. 11:35-37), இவர்களும் நீதியினிமித்தம் துன்பப்படுகிறார்கள். (மத். 5:10-12, 44, 45; மாற் 13:9, 11-13; யோவா 15:18, 19; 16:2; பிலி. 1:28, 29; 2 தீமோ. 3:12; 1 பேது. 3:14, 16, 17; 4:14, 16, 19). மேலும், இந்த பிரதிஷ்டை செய்த ஊழியர்கள் தங்கள் தவறுகளினிமித்தம் சிட்சைகளையும் பெறுகிறார்கள், இது ஆவியின் சாட்சியத்தின் மற்றொரு அம்சமாகும். (எபி. 12:5-13; சங். 94:12, 13; 118:18; 119:67; நீதி. 3:11, 12; ஏசா. 26:16; லூக்கா 12:47, 48; வெளி. 3:19).

மூப்பரான பாத்திரவான்களைப் போலவே, ''யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்தவர்கள்'' கிறிஸ்துவின் ஆயிரவருஷ மத்தியஸ்த ராஜ்யத்தின் ஊழியத்தில் தங்கள் ஸ்தானத்தின் தகுதிக்காக பரீட்சிக்கப்பட்டு சோதிக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள்: நிறைவேறுதலான கெர்சோனிய லேவியர்களான வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் எஸ்றா 8:20-ன் நிறைவேறுதலாகிய நிதனிமியர்களான பிரதிஷ்டை செய்த மீதியாயிருப்பவர்கள் (பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள்) ஆகிய இருவருக்கும் இது உண்மையாயிருக்கிறது. மூப்பரான பாத்திரவான்களைப் போலவே, இவர்கள் பரிசுத்த ஆவி, சத்தியத்தின் நல் அறிக்கையை அல்லது நற்சாட்சியைப் பெற்று, தேவனுடைய சிநேகிதர்கள், ஊழியர்கள் மற்றும் வருங்கால தேவனுடைய குமாரர்களாக இருக்கிறார்கள் (ரோம. 8:16; E.Vol.15, அத்தியாயம். 10-ஐப் பார்க்கவும்). இதில் நாம் மகிழ்வோமாக! ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாத அர்ப்பணிப்புள்ள ஊழியர்களுக்கு பரிசுத்த ஆவியும், பரிசுத்த ஆவியின் சாட்சியும் இல்லை என்றும், அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கவும் முடியாது என்றும் யாரும் நமக்கு சொல்லாதிருப்பார்களாக!

***பிரதிஷ்டை செய்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாதவர்கள், #2-பூரண மனிதனுக்குரிய நம்பிக்கைகளின் விருப்பங்களைக் கொண்டுள்ளனர்.***

ஆவியினால் பிரகாசிக்கப்பட்டவர்களான, ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்தவர்கள் ஞாபகார்த்த இராப்போஜனத்தில் பங்கேற்கக் கூடாது என்று வேறு சில வேதாகம ஆராய்ச்சி குழுக்கள் பிரசங்கித்துள்ளன! மீண்டும், நாம் தேவனுடைய வார்த்தையை கவனத்திற்கு கொண்டுவருவோம்: அப்போஸ்தலர்கள் இயேசுவோடுகூட முதல் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்றார்கள், அவர்கள் பிரதிஷ்டை செய்தவர்கள் என்றாலும் அவர்கள் அப்பொழுது ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் அல்ல என்ற உண்மையினை கருத்தில் கொள்வோம் [அவர்கள் குறைந்த கருத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தாலும் - யோவா. 20:22]. பெந்தெகொஸ்தே நாளில் ஆவி ஊற்றப்படும் வரை அவர்கள் ஆவியினால் ஜெனிப்பிக்கப் பட்டிருக்க முடியாது. பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுவதற்கும், கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்துவம் பெறுவதற்கும் வாய்ப்பு இருந்திருந் தாலும், பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னர், அவர்களுடைய நிலைமை, இன்றுள்ள ''யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்தவர்களின்'' நிலைமைக்கு மிகவும் ஒத்ததாகவே இருந்தது. கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்தினராவதற்கான சிலாக்கியம் இனி கிடையாது. (வெளி. 7:1-3; ஆமோஸ் 9:13).

எனவே, தவறான தலைவர்கள், ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்த யேகோவா தேவனுடைய ஊழியர்கள், அப்பமும் பாத்திரமும் சபையில் கூடியிருப்பவர்களிடையே கடத்தப்படுவதைப் பார்க்க மட்டுமே வேண்டும் என்றும், கர்த்தருடைய இராப்போஜனத்தில் (இரவு உணவு) அவர்கள் பங்கேற்கக் கூடாது என்றும் போதிப்பதன் மூலம், யேகோவா தேவன், இயேசு மற்றும் அப்போஸ் தலர்களின் தெளிவான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதவர்களாகவும் தங்களை ஆக்குகிறார்கள்; கிறிஸ்தவ ஜீவியத்தின் மிகப் பிரமாண்டமான மற்றும் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட அம்சங்களில் ஒன்றை இழக்கவும் செய்கிறார்கள்; அதாவது, ஞாபகார்த்த அப்பம் மற்றும் பாத்திரத்தில் பங்கு பெறுவதை இழக்கிறார்கள் என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. ஞாபகார்த்தத்தை அவர்கள் கவனிக்கலாம் அல்லது பார்க்கலாம், ஆனால் பங்கேற்க கூடாது என்று கட்டளையிடுவதென்பது உண்மையில் அவர்கள் மீது ஒரு கற்பனையான மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட வரம்பைத் திணிக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

*பிரதிஷ்டை செய்த ஆவியினால்*
*ஜெனிப்பிக்கப்படாதவர்கள்,*
*#3- ஊழியத்திற்கான வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.*

## யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்கிறவர்கள்

மேற்கூறியது போல, உன்னத/பரம அழைப்பிற்கான வாசல் செப்டம்பர் 16, 1914-ல், இறுக்கமாக மூடப்பட்டு விட்டது என்று நாங்கள் கற்பிக்கிறோம், எனவே இனி ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதல் இல்லை! இழந்துபோனதை திரும்பக் கொடுத்தல் பணி துவங்குவதற்கு முன்பு, பிரதிஷ்டையின் மூலம் தேவனிடம் வருபவர்கள் எவரும், பூமிக்குரிய தளத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். அத்தகையவர்கள் [CEC உட்பட] தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூப்பரான பாத்திரவான்களைப் போன்ற அதே நிலைமையின் கீழ் வருவார்கள். மூப்பரான பாத்திரவான்கள், அவர்களுக்கான எந்த அழைப்பும் திறந்திருக்காத போது உள்ளே வந்தார்கள் - அதாவது, உன்னத/பரம அழைப்பு அதுவரை திறக்கப்படாத போதும், இழந்துபோனதை திரும்பக்கொடுத்தலுக்கான வாய்ப்புகள் திறக்கப்படாத போதும் உள்ளே வந்தார்கள். உலகில் உள்ள மற்றவர்களைவிட மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெற்றுக் கொள்வார்கள் என்ற அறிவித்தலைத் தவிர, அவர்களுடைய பிரதிஷ்டை என்ன ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் என்பதை அறியாமலேயே, அவர்கள் தங்களைத் தாங்களே தேவனுக்கென்று அர்ப்பணித்துக் கொண்டார்கள். (எபி. 11:35). பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள், பாத்திரவான்களைப் போலவே தங்கள் மனதின் திறன்களில் மனித பரிபூரணத்துடன் கல்லறையிலிருந்து வெளிவரமாட்டார்கள், ஆனால் அவர்கள் நீதிமான்களின் உயிர்த் தெழுதலைப் பெற்றிருப்பார்கள். (லூக். 14:14).

*பிரதிஷ்டை செய்த ஆவியினால்*
*ஜெனிப்பிக்கப்படாதவர்கள்,*
*#4- கிறிஸ்துவின் குணசாயலில் வளர்ச்சியைக் கொண்டுள்ளனர்.*

இப்படிப்பட்ட நிலைமைகளின் கீழ் யாரெல்லாம் கர்த்தருக்கென்று முழுமையான பிரதிஷ்டை செய்து, அவருடைய வழிகளைப் பின்பற்றும்படி அனைத்தையும் விட்டுவிட்டு, அந்த பிரதிஷ்டைக்கு உண்மைத்துவமாகவும், உத்தமமாகவும் வாழ விரும்புகிறார்களோ, அவர்கள் இதே போன்றதான வகுப்பாராக எண்ணப்படுவதற்கு சிலாக்கியம் பெறலாம் என்பது நம்முடைய புரிதலாயிருக்கிறது. [அதே வகுப்பாராக அல்ல, ஆனால் அதேபோன்றதான வகுப்பார் அல்லது அதே பொதுவான வகுப்பார் - அதாவது நிறைவேறுதலான மனாசே கோத்திரமாகிய ஆயிர வருடத்திற்கு முந்தைய ஆபிரகாமின் சந்ததி, என்னும் வகுப்பார் - எண். 32; E.Vol.4, பக்கம் 450, 451; PT'63, பக்கம் 45, 46; PT'78, பக்கம் 56, 57]. சுவிசேஷ யுகத்தின் உன்னத/பரம அழைப்பின் முடிவுக்குப் பிறகும், ஆயிர வருட யுகத்தின் முழுமையான திறப்புக்கு முன்னர் பிரதிஷ்டை செய்பவர்களை கர்த்தர் ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கான எந்த காரணத்தையும் நாம் அறியவில்லை.

இப்போது நாம் ஆசரிப்புக்கூடார ஒப்புமைகளைக் குறித்து சிந்திக்கலாம். ஆசரிப்புக் கூடாரத்தைச் சூழ்ந்துள்ள மேக ஸ்தம்பம், அக்கினி ஸ்தம்பம் ஏற்ற கால சத்தியத்தையும், கிறிஸ்து வகுப்பாரின் மீதுள்ள அதன் ஆவியையும்

அடையாளப்படுத்துகிறது. கர்த்தர் சுவிசேஷ யுகம் முழுவதும் கிறிஸ்து வகுப்பாரை ஏற்ற கால சத்தியம் மற்றும் அதன் ஆவியைப் பெறுபவர்களாகவும் பாதுகாப்பு களஞ்சியங் களாகவும் ஆக்கியுள்ளார் என்பதே இதன் பொருளா யிருக்கிறது. நிச்சயமாகவே, வேதவாக்கியங்கள் இந்தக் கருத்தை ஏராளமாக நிரூபிக்கின்றன; பலவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில வேத பகுதிகள் பின்வருமாறு: சங். 25:14; 97:11; 119:66, 99, 100, 130; நீதி. 3:32; ஏசா. 30:18-21; ஆமோஸ் 3:7; மத். 11:25; PT'34, பக்கம் 53.

*பிரதிஷ்டை செய்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாதவர்கள், #5-கிறிஸ்தவர்களாக, நீதியினிமித்தம் துன்பப்படுதலைப் பெறுகிறவர்களாயிருக்கிறார்கள்.*

PT 1983, பக்கம் 79-ல் கோல்கி போதகர் நமக்கு இந்த ஆக்கபூர்வமான முன்னேறிக் கொண்டிருக்கும் சத்தியத் தைக் கொடுத்தார்! அடைப்புக்குறிக்குள்: [சுவிசேஷ யுகத்தின் முதற்பேறான சபை பூமியை விட்டு வெளியேறியதிலிருந்து, நம்முடைய நாள் வரைக்கும் பிரதிஷ்டை செய்கிறவர்களான 'யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்கிறவர்களே' (Z 5761), தேவன் வாசம்செய்து, ஜனங்களை சந்தித்து ஆசீர்வதிக்கும் ஸ்தலமாகும். நிறைவேறுதலான மேக ஸ்தம்பம், அக்கினி ஸ்தம்பமான, சத்தியமும் அதன் ஆவியும் அவர்கள் மீது தங்கியுள்ளன, அவர்கள் அவைகளினுடைய களஞ்சியமாக இருக்கிறார்கள்]. மேக ஸ்தம்பம், அக்கினி ஸ்தம்பம் நேரடியாக ஆசரிப்புக் கூடாரத்தின் மீது மட்டுமே தங்கியிருந்தது; அது பிரகாரத்திலோ அல்லது பாளையத்திலோ தங்கவில்லை. மூப்பரான பாத்திரவான்களுடன் இருந்ததைப் போலவே, தேவன் இப்போது நிறைவேறுதலான பிரகாரத்தில் உள்ளவர்களுக்கும், பாளையத்தில் உள்ள ''உண்மையாக மனந்திரும்பி, விசுவாசிக்கும்'' தற்காலிகமாக நீதிமானாக்கப் பட்டவர்களான பிரதிஷ்டை செய்தவர்களுக்கும் பொருத்த-மான பிரகாசிப்பிக்கப்படுதலையும் ஆசீர்வாதங்களையும் வழங்குகிறார். ஆகவே, மூப்பரான பாத்திரவான்கள் அவர்களுடைய காலத்தில் இருந்ததைப் போலவே, எபிஃபெனி பிரகாரத்திலும் எபிஃபெனி பாளையத்திலும் பிரதிஷ்டை செய்தவர்கள் இப்போது தேவனுடைய வாசஸ்தலமாக, ஜனங்களை சந்தித்து ஆசீர்வதிக்கும் ஸ்தலமாக இருக்கிறார்கள். [ஆவிக்குரிய வகுப்பார் அனைவரும் தெரிந்தெடுக்கப்பட்டதால், ''யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்பவர்களான,'' வாலிபரான பாத்திரவான்களும் (YW), பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களும் (CEC) இந்த மகத்தான தயவைப் பெறுகிறார்கள்].

*பிரதிஷ்டை செய்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாதவர்கள், #6-தவறுகளுக்கான சிட்சைகளை அடைபவர்களாயிருக்கிறார்கள்.*

மேக ஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும் நேரடியாகப் பாளையத்தின் மீது தங்கியிருக்கவில்லை, அல்லது நேரடியாகப் பிராகாரத்தின் மீதும் தங்கியிருக்கவில்லை, அது பொதுவாக சித்தரிக்கப்பட்டது போல, நேரடியாக முறையான ஆசரிப்புக் கூடாரத்தின் மீது மட்டுமே தங்கியிருந்தது. எண்.9:15, ''**வாசஸ்தலம் ஸ்தாபனஞ்செய்யப்பட்ட நாளிலே, மேகமானது சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடிற்று: சாயங்காலமானபோது, வாசஸ்தலத்தின் மேல் அக்கினிமயமான ஒரு தோற்றம் உண்டாயிற்று: அது விடியற்காலமட்டும் இருந்தது.**'' மகிமையிலுள்ள கிறிஸ்துவுக்கு தேவன் இப்பொழுது பொருத்தமான பிரகாசிப்பித்தலையும் ஆசீர்வாதங் களையும் வழங்கும்போது மட்டுமே, இவை நிறைவேறு தலான பிரகாரத்தில் உள்ளவர்களுக்கும், பாளையத்தில் உள்ள ''உண்மையாகவே மனந்திரும்பி விசுவாசிக்கிற,'' தற்காலிகமாக நீதிமானாக்கப்பட்டவர்களான, பிரதிஷ்டை செய்தவர்களுக்கும் கடத்தப்பட முடியும். எனவே, மூப்பரான பாத்திரவான்கள் அவர்களுடைய காலத்தில் இருந்ததைப் போலவே, எபிஃபெனி பிரகாரத்திலும் எபிஃபெனி பாளையத்திலும் உள்ள பிரதிஷ்டை செய்தவர்கள் இப்போது தேவனுடைய வாசஸ்தலமாகவும், ஜனங்களை சந்தித்து ஆசீர்வதிக்கும் ஸ்தலமாகவும் உள்ளனர்.

''யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்கிறவர்-களுக்கு'' தேவன் எப்பேர்ப்பட்ட அற்புதமான சிலாக்கியத்தை அளித்திருக்கிறார்! உலகமானது, (மற்றும் சில வேதாகம மாணாக்கர் குழுக்கள்) அத்தகைய உரிமை கோருதலை கண்டித்து வெறுத்தால், அது அவ்வாறு செய்யட்டும்; ஆனால் கிறிஸ்துவே தேவனுடைய சத்தியத்தையும் ஆவியையும் பெறுகிறவர்களும், பாதுகாப்பு களஞ்சியமாயிருக்கிறார்கள் என்ற உண்மையை இது சிறிதும் மாற்றாது (தேர்ந் தெடுக்கப்பட வேண்டிய ஆவிக்குரியவர்கள் அனைவரும் தெரிந்தெடுக்கப்பட்டதால், ''யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்பவர்களான'' வாலிபரான பாத்திரவான்-களும் (YW), பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்-காரர்களும் (CEC) இந்த மகத்தான தயவைப் பெறுகிறார்கள்). பிரியமானவர்களே, உலகத்தினுடைய பிரபலமானவர்-களும், வலிமையானவர்களும், ஞானவான்களும் அல்லது புகழ்பெற்றவர்களும் பெற்றிருப்பதைவிட அல்லது பெருமை பாராட்டுவதை விட இது, மிகவும் மேம்பட்டதாய் நம்மிடம் இருப்பது நம்முடைய சிலாக்கியமாகும். எல்லா சிலாக்கியங் களிலும் மிகச்சிறந்த சிலாக்கியமான இதற்காக கர்த்தருக்கு நன்றியறிதலை ஏறெடுக்கிறோம், இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகின் மிகவும் அனுகூலம் பெற்றவர்கள் எந்த நன்மையானதைப் பெற்றிருந்தாலும் அல்லது அவர்கள் பெற்றிருப்பதாக கருதினாலும் நாம் பொறாமைப்படுவதற் கில்லை.

***

*பிரதிஷ்டை செய்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாதவர்கள், #7-பாவங்களைச் செய்வதற்கான சோதனைகளின் மத்தியில் குணாம்சத்திற்கான பரீட்சைகளைக் கொண்டுள்ளனர்.*

# ஆயிர வருஷ யுகம்
# பல தீர்க்கதரிசனங்களில் ஒன்று

The Millennium - One of many Prophecies

‘மில்லினியம்’ என்ற சொல் ஆயிரம் வருடங்கள் எனப் பொருள்படும் லத்தின் பெயரிடைச் சொல்லாகும். சில சமயங்களில் ‘ஆயிரவருட ராஜ்யம்’ என்று பொருள்படும் ரெக்னம் (regnum) என்ற லத்தீன் பெயர்ச்சொல்லுடன் பயன்படுத்தப்படுகிறது. கிறிஸ்துவும் அவருடைய விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களும் பூமியையும் மனுக்குலத்தையும் ஆளுகை செய்யும் ஆயிரவருட யுகத்தைக் குறிப்பதற்கு இதை ஒரு பெயர்ச்சொல்லாகப் பயன்படுத்துகிறோம். அவர்கள் இவ்வாறு ஆளுகை செய்ய வேண்டும் என்பது பல வேதவசனங்களில் கற்பிக்கப்படுகிறது, அவற்றில் சில இது ஆயிரம் வருடங்கள் நீடிக்கும் என்று நேரடியாகவே கூறுகின்றன, உதாரணமாக, வெளி. 20:4-9; இது ஆயிரவருட யுகத்திற்குப் பயன்படுத்தப்படும் ‘‘கர்த்தருடைய நாள்,’’ ‘‘தேவனுடைய நாள்,’’ போன்ற பெயர்களிலும் குறிப்பிடப்படுகிறது; ஏனென்றால், நம்முடைய கர்த்தருக்கு நமது ஆயிரம் வருஷம் ஒருநாள்போல இருக்கிறது (சங். 90:4; 2 பேதுரு 3:8). இவ்வாறாக, மில்லினியம் (மற்றும் ஆயிரம் ஆண்டு காலம்) என்ற வார்த்தை வேதாகமத்தில் காணப்படவில்லை என்றாலும், அந்த வார்த்தையின் அடிப்படையிலான கருத்து வேதாகமத்தில் கற்பிக்கப்படுவதைக் காண்கிறோம். இந்த ஆயிர வருட யுகமானது, 1874-2874 வரைக்குமானதாகும். இந்த 1,000 வருட நாளின் நோக்கம், 1874-ல் இருந்து நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின் நோக்கங்களை நிறைவேற்றுவதாகும்.

1874-ல் துவங்கிய ஆயிரவருட யுகத்துடனான தொடர்பில், லவோதிக்கேய காலக்கட்டமும் சத்தியம் மற்றும் அதனுடைய ஆவியின் பிரதேசத்திற்கு, குறிப்பாக யேகோவா தேவனுக்கு இது பிரத்யேகமான பரிசுத்த இளைப்பாறுதலின் காலக்கட்டமாய் இருக்கவேண்டும்; இதில் சிறுமந்தையின் புதிய மனமாற்றங்கள் அவர்களுடைய பொதுவான வெளிப்புற வேலையிலிருந்து நிறுத்தப்பட்டன. இந்த பொதுவான வெளிப்புற வேலைக்குப் பதிலாக, சிறுமந்தைக்கு தேவன் இந்த யுகத்தின் தொடக்கத்தில், சிறுமந்தை அங்கத்தினர்களை அறுவடை செய்யும் ஊழியத்தைக் கொடுத்தார் (சங். 50:5; மத். 13:30; 24:31; மல். 3:17). சத்திய எழுத்துக்களின் வேதவாக்கியங்களிலிருந்து மீண்டும் மீண்டும் காட்டப்பட்டுள்ளபடி, சிறுமந்தை அங்கத்தினர்களின் அறுவடையானது, 1874 இலையுதிர் காலம் முதல் 1914 இலையுதிர் காலம் வரையிலான 40 ஆண்டு கால அறுவடையின் அறுப்பு




காலத்தில் நிறைவேற்றப்பட்டு, 1916 வசந்த காலம் வரை பொறுக்கி எடுத்து கூட்டி சேர்த்தல் தொடர்ந்தது.

ஆனால் சிறு மந்தையின் இந்தப் பணியின் காரணமாகவும், மற்றவர்களின் சுவிசேஷ ஊழிய பிரயாசத்தின் மூலமாகவும் 1874-க்குப் பிறகும் ஜனங்கள் மனந்திரும்புதல், நீதிமானாக்கப்படுதல் மற்றும் பிரதிஷ்டை செய்தல் ஆகியவற்றிற்கு தொடர்ந்து வந்தனர். இருந்த-போதிலும், சிறுமந்தையானது 1874-க்குப் பிறகு வெளியே புறப்பட்டு, அப்படியாக மனமாற்றமடைந்தவர்களை தெய்வீக ஒழுங்கின்படி தங்களுக்கு நியமிக்கப்பட்ட விசேஷித்த ஊழியத்தின் பலன்களாக கூட்டிச்சேர்க்கும்படி புறப்படவில்லை [தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும் (நடப்பட்ட விதையிலிருந்து அல்லாமல், தற்செயலாக விழுந்து வளர்ந்தவை), கிளைகழிக்காதே விட்ட திராட்சச்செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பாயாக (கிளை நறுக்கப்படாதது; சொல்லர்த்தமாக நசரேய விரதம்; இங்கே பயன்-படுத்தப்பட்டுள்ள உருவகமானது நசரேயனுடைய வெட்டப்படாத தலைமுடி என்பதிலிருந்து எடுக்கப்பட்டது - எண். 6:5 - அதாவது, அதனுடைய விளைவின் பலன் அனைத்தும் தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது) தேசத்துக்கு அது ஓய்வு வருஷமாயிருக்கக்கடவது - லேவி. 25:5].

லவோதிக்கேயாவின் சகாப்தமானது, போதகர்கள் ரசல் மற்றும் ஜாண்சன் ஆகியோரை இரண்டு நட்சத்திர அங்கத்தினர்களாகக் கொண்டு, ஏற்ற கால சத்தியத்தை வெளிப்படுத்தும் பணியைத் தொடர்கிறது. இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகின் நிலைமைகள் பாவத்திற்கு சாதகமாகவும் நீதிக்கு பாதகமாகவும் இருப்பதால், பரிசுத்த பெரும்பாதை திறக்கப்படுவதற்கு முன்பு பிரதிஷ்டை செய்பவர்கள் அனைவரும் மரணபரியந்தம் பிரதிஷ்டை செய்கிறார்கள். இவ்வாறான நிலைமைகளின் மத்தியில் கர்த்தருக்கு உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்க விரும்புவோர் தங்கள் மனுஷீக உரிமைகளை அவ்வாறு விலையாகக் கொடுக்க வேண்டும், அதாவது, அவர்கள்

மரணபரியந்தம் பிரதிஷ்டை செய்ய வேண்டும்; மேல்நிலை பரிசுத்தவான்களாக இல்லாமல் இருந்தாலும், நமது தற்போதைய தேவைகளுக்கு ஏற்றவாறு ரஸல் போதகர் மற்றும் ஜாண்சன் போதகரின் எழுத்துக்கள் காலத்திற்கேற்ற சத்தியத்தை முன்னெடுத்துச் செல்வதால் (PT 1954, பக்கம் 78) அவர்கள் இன்னும் லவோதிக்கேய பரிசுத்த-வான்களாக இருக்கிறார்கள். நமது போதகரின் மரணத்திற்குப் பிறகு, அவர் தனது ஜீவியத்தில் இருந்ததைப் போலவேதானும், தனது மரணபரியந்தமும் தேவனுக்கு உண்மைத்துவமாக இருப்பதாக பொருத்தனை செய்ததாக மெண்டா ஸ்டர்ஜன் (Menta Sturgeon) ஒரு பதிப்பில் நமக்குச் சொல்கிறார். ''அறுவடை முடிவடையவில்லை'' என்ற கட்டுரை வெளியான பிறகு, கன்வென்ஷன்களில் மீண்டும் மீண்டும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதமாக, அறுவடை முடிவடையும் எந்த தேதியையும் அவர் நிர்ணயிக்க-வில்லை என்று நமது போதகர் உறுதியாகக் கூறினார், இதனை கோடை காலத்தின் பிற்பகுதியிலும் இலையுதிர்-காலத்தின் ஆரம்பத்திலும் நடந்த பல கன்வென்ஷன் கூட்டங்களில் நமது போதகர் கூறியதை நாங்களும் மற்றவர்களும் கேட்டுள்ளோம் (PT'86, பக்கம் 45).

ஏனென்றால், எபிஃபெனி தூதர் நமக்குக் காட்டியது போலவும், வேதாகமம் நிரூபிப்பது போலவும், வாலிபரான பாத்திரவான்களின் அழைப்பு 1954-ல் முடிவடைந்தது. அந்தக் காலத்திலிருந்து இப்பொழுது வரை பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் உள்ளே வருகிறார்கள். அவர்கள் சபையின் லவோதிக்கேய நிலையின் ஒரு பகுதியாக இருக்கிறார்களா? நிச்சயமாக, அதன் பரந்த கருத்தில், மிகப்பெரிய பரந்த கருத்தில் ஆம் அவர்கள் சபையின் லவோதிக்கேய நிலையின் ஒரு பகுதியாக இருக்கிறார்கள். லவோதிக்கேய சபையின் காலப்பகுதி அதன் பரந்த கருத்தில் சுவிசேஷ யுகம் முழுமையாக முடிவடையும் வரை தொடர்கிறது. மேலும் நீங்கள் அறிந்திருக்கிறபடி, சுவிசேஷ யுகம், சகோ. ஜாண்சன் கற்பித்தது போலவும், சகோ. ரசல் அதே விஷயத்தை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கற்பித்தது போலவும், அது படிப்படியாக நிறைவடைந்து வருகிறது. ஆகவே, ஆயிரவருட யுகம் 1874-ல் துவங்கி, படிப்படியான நிலைகளில் திறக்கப்படுவது போல, சுவிசேஷ யுகமும் படிப்படியான நிலைகளில் நிறைவடைகிறது. இவர்கள் அனைவரும், நிச்சயமாக கிறிஸ்துவுக்கு முன் பணிந்து முழங்காற்படியிடுவார்கள், அதே போல் மனுக்குலத்தின் மற்ற அனைவரும் இறுதியில் பணிந்து கொள்வார்கள் (ஏசா. 60:14; பிலி. 2:9-11; சங். 72:9). மனுக்குலத்திற்கான மகத்தான ஆயிர வருட மத்தியஸ்தப் பணி நிறைவேற்றப் படும்போது, யேகோவா தேவனே மகத்துவம் நிறைந்த, தன்னில்தானே - ஜீவனுடையவராகவும் சர்வவல்லமை-யுள்ளவராகவும் இருக்கிறார் என்பதும், தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் போன்றவர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்படாதவர்களுக்காக அவர் தனது மகத்தான விடுதலையை நிறைவேற்றுவார் என அவருக்-காகக் காத்திருந்தவர்கள் வெட்கப்படுவதற்கு எந்தக் காரணமும் இருக்காது என்பதும் (சங். 27:14; ஏசா. 25:9), கிறிஸ்துவுக்கு (மற்றவர்களுக்கும்) முன்னெப்போதையும் விட மிகத் தெளிவாகத் தெரியும்.

## ஆயிரவருட யுகத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம்

### ஏசாயா 40 மற்றும் 41

ஏசாயா 40 மற்றும் 41-ல் ஆயிர வருட யுகத்தைப் பற்றிய மிகவும் குறிப்பிடத்தக்க தீர்க்கதரிசனம் உள்ளது. மில்லினியம் என்ற வார்த்தைக்கு ஆயிரம் ஆண்டுகள் என்று பொருள்; இது வேதாகமப்பூர்வமாக ஏழாவது ஆயிர வருடத்தைக் குறிக்கிறது, அதாவது இயேசுவின் இரண்டாம் வருகையின் ''நாள்'', இது 1874 முதல் 2874 வரையிலான காலம் (E.Vol. 2, பக்கம் 29; E.Vol.5, பக்கம் 161), அதன் முடிவில் இயேசு ராஜ்யத்தை பிதாவிடம் ஒப்படைப்பார் (1 கொரி. 15:24-26). இயேசுவின் இரண்டாம் வருகையின் காலமான ஆயிரவருட யுகமானது, பரோஷியா, எபிஃபெனி மற்றும் பெசிலியா ஆகிய கிரேக்க வார்த்தைகளால் குறிக்கப்படும் மூன்று நிலைகள் அல்லது காலக்கட்டங்களாக முன்னேறு-கிறது. ஏசாயா 40 மற்றும் 41-ஐ நாம் கருத்தில் கொள்ளும்போது, இந்தத் தீர்க்கதரிசனம் ஆயிரவருட யுகத்தின் மூன்று நிலைகள் அல்லது காலகட்டங்களின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் பொருந்தும் என்பதைக் கவனிப்போம். 40-வது அதிகாரம், தேவனுடைய ஜனங்களான மாம்ச இஸ்ரயேலுக்கு வழங்கப்பட வேண்டிய ஏற்றகால ஆறுதலின் செய்தியுடன் தொடங்குகிறது. 1878 ஆம் ஆண்டு முதல் அவர்களுக்கு நியமிக்கப்பட்ட காத்திருப்பு காலம் (வசனம் 2-ன் பின்பகுதியைப் பார்க்கவும்) முடிந்துவிட்டது என்றும், இயேசு கிறிஸ்துவை நிராகரித்த தற்காக அவர்களுடைய பாவநிவிர்த்தியின் காலம் முடிந்துவிட்டது என்றும் அவர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்; ஏனென்றால் அவர்கள் கர்த்தரின் கையில் ''இரட்டிப்பாய்'' அடைந்து தீர்ந்து விட்டார்கள் (P. 2, பக்கம் 226, 227; S.Vol.5, பக்கம் 357; E.Vol. 4, பக்கம் 109). முன்னெப்போதையும் விட 1878 முதல் இந்த ஆறுதல் இஸ்ரயேலுக்கு பிரசங்கிக்கப்பட்டது. (E.Vol.7, பக்கம் 402).

ஏசாயா 40:3-5-ல் உள்ள பகுதி யோவான் ஸ்நானனின் ஊழியத்தைக் குறிக்கிறது, ஆனால் அதன் மாபெரும் நிறைவேற்றத்தில் இந்த தீர்க்கதரிசனமானது சுவிசேஷ யுகத்தின் இறுதியில், குறிப்பாக 1829 முதல் மில்லர் இயக்கத்திலிருந்து துவங்கிய சபையின் ஊழியத்திற்குப் பொருந்தும். காணாமற்போன வெள்ளிக் காசாகிய இழந்து போனதைத் திரும்பக்கொடுத்தலின் செய்தியானது, (லூக்கா 15:8-10; E.Vol. 9, பக்கம் 110, 111), குறிப்பாக 1874-ல் யூபிலி எக்காளம் ஊதப்படுதலின் போது தொடங்கி, மீதமுள்ள ஆயிரவருட யுகம் முழுவதும் தொடரும் என வலியுறுத்தப் பட்டுள்ளது. R 1379-ல், ஏசாயா 40:3-ன் ''சத்தம்'' மற்றும் வசனங்கள் 3-5-ன் திரும்பக்கொடுத்தல் செய்தி ஆயிரவருட யுகத்திற்கு பொருந்தும் என்று ரஸல் போதகர் விளக்கி

காண்பிக்கிறார். வசனங்கள் 1, 2-ல் ஆறுதலின் செய்தியை விளக்கிய பிறகு, அதனுடைய அறிவித்தலில் பரோஷியாவின் செயல்பாட்டை அவர் பின்வருமாறு வலியுறுத்துகிறார்: ஆனால் இந்த ஆறுதலின் வார்த்தைகளை யார் வழங்க ருக்கிறார்கள்?

வசனம் 3: ஒன்று யோவான் ஸ்நானகனைப் போலவும், மற்றொன்று எலியாவைப் போலவும் (எலியா என்ற பெயருக்கான கிரேக்க வடிவம் எலியாஸ்) இருப்பதாகக் காட்டுகிறது: "**கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வை பண்ணுங்கள் என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று.**"ஆனால் இஸ்ரயேலர் யோவான் ஸ்நானகனை எலியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை, பின்னர் யோவான் அறிவித்தபடி தம்மையே ஒப்புக்கொடுத்த மேசியாவையும் அவர்கள் தங்களுடைய ராஜாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால், அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படாதவரும் மற்றும் நிராகரிக்கப்பட்டவருமான ராஜா அவர்களை விட்டு விலகினார், அவர் மகிமையிலும் வல்லமையிலும் மீண்டும் வரும் வரை அவர்களின் வீடு '**பாழாக்கி விடப்பட்டது,**' மறுபடியும் அவருடைய பிரசன்னத்தை எலியாவின் ஆவியிலும் வல்லமையிலும் வரப்போகிற வேறொரு சத்தம் அறிவிக்க வேண்டும், அதாவது, வனாந்தரத்தில் கூப்பிடும் மற்றொரு "சத்தம்" அறிவிக்க வேண்டும்.

தேவனுடைய ராஜ்யத்தின் கீழ் ஸ்தாபிக்கப்படப்போகிற காரியங்களின் புதிய ஒழுங்குமுறைக்காக, இதைக் கேட்கும் அனைவரையும் தங்கள் இருதயத்திலும் ஜீவியத்திலும் ஆயத்தமாகும்படி இந்த சத்தம் அழைக்கிறது, இது இவ்வாறு விவரிக்கிறது: வசனம் 4: "**பள்ளமெல்லாம்** (சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவர்கள்) **உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும்** (தற்போதைய பூமியின் உயர்ந்தவர்கள்) **தாழ்த்தப்பட்டு, கோணலானது** [கோணலான பள்ளத்தாக்கு-களில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற தற்போதைய பொல்லாத காரியங்களின் ஒழுங்குமுறை] **செவ்வையாகி, கரடுமுரடானவை** [தப்பறைகள், முரண்பாடுகள், தவறான கோட்பாடுகள் மற்றும் மாறுபாடுள்ள பொது உணர்வின் இடறுதலுக்கேதுவான கற்கள்] **சமமாக்கப்படும்.**"

வசனம் 5: இவ்வாறு கூறுகிறது: **கர்த்தரின் மகிமை** [அவருடைய நீதியுள்ள தன்மை, மற்றும் ராஜ்யம், வல்லமை, ஞானம் மற்றும் அன்பு ஆகியவற்றின் மகிமை] **வெளியரங்கமாகும்** [அப்போது], **மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும்** [உயர்வாக போற்றும்], **கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று.**" என்னவொரு மகிமையான செய்தி! இதைக் கேட்கிற யாவரும் அதை உலகெங்கும் அறிவிப்பதில் பங்கடையட்டும்; ஏனென்றால் காலம் சமீபமாயிற்று. வசனங்கள் 3-5-ஐ இவ்வாறு விவரித்த பிறகு, ரஸல் போதகர் தொடர்ந்து அடுத்தடுத்த வசனங்களைப் பற்றி பின்வருமாறு கருத்து தெரிவிக்கிறார்: "ஆனால் சிலர் மட்டுமே இந்த பெரிய யுக மாற்றத்திற்குத் தயாராக உள்ளனர்: பெரும்பாலானவர்கள் எல்லாம் அப்படியே தொடரும் என்று நினைக்கிறார்கள். குறிப்பாக அரசியல் மற்றும் இறையியல் மற்றும் நிதித்துறையில் உள்ள வல்லுநர்கள் சமூகத்தின் பள்ளத்தாக்குகள் மற்றும் குன்றுகள் ஒருபோதும் சமமாக்கப் படுவதில்லை என்று உறுதியாகவும் திடநம்பிக்கையுடனும் எண்ணுகிறார்கள். இந்த நோக்கத்திற்காக கூட்டமைப்புகள் மற்றும் அறக்கட்டளைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன; ஆனால் கர்த்தர் அவர்களுக்கு மற்றொரு செய்தியை அனுப்புகிறார்."

வசனங்கள் 6-8: "**பின்னும் கூப்பிட்டுச் சொல்** (வெளிப் படையாக தெரியப்படுத்து) **என்று ஒரு சத்தம் உண்டாயிற்று: என்னத்தைக் கூப்பிட்டுச் சொல்வேன் என்றேன்?** (வெளிப்படையாக தெரியப்படுத்துவே னென்றேன்) [அதை அறிவிக்க வேண்டும் என்பதே பதிலாயிருக்கிறது]. **அதற்கு: மாம்சமெல்லாம் புல்லைப்– போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப் போலவும் இருக்கிறது.** வசனம் 7: **கர்த்தரின் ஆவி** (சுவாசம்) **அதின்மேல் ஊதும்போது, புல் உலர்ந்து, பூ உதிரும்: ஜனமே புல்.** வசனம் 8: **புல் உலர்ந்து பூ உதிரும்: நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல் என்று உரைத்தது.**"பூமிக்குரிய அமைப்புகளின் அனைத்து வல்லமையையும் மகிமையை யும் அதிகாரத்தையும் சிதறடிக்க கர்த்தரிடமிருந்து ஒரு சுவாசம் மட்டுமே தேவைப்படும். ஆகையால் அவருடைய வார்த்தை நிறைவேறும்; அவருடைய ஆலோசனையை எதிர்க்கும் அனைவரும், சூளையைப் போல எரியும் மகா கோபத்தின் நாளில் மடிந்துபோவார்கள், அதில் பெருமை யுள்ள அனைவரும், துன்மார்க்கர்கள் அனைவரும் வைக்கோல் போல இருப்பார்கள். (மல். 4:1).

அடுத்து, ஏசா. 40:9-11 வரையுள்ள வசனங்கள், அந்த உபத்திரவ காலத்தில் உள்ள தேவனுடைய ஜனங்களுக்கு ஊக்கமளிக்கும் செய்தியாக மாறுகிறது (சங்கீதம் 46). அவர்கள் பயப்படத் தேவையில்லை. **ஆதலால் பூமியின்மேல்** (சமுதாயத்தின்மேல்) **வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோகும்போது**, அவர்கள் தங்கள் இரட்சிப்பு அப்பொழுதே சமீபமாயிற்றென்று அறிந்து, சந்தோஷப்பட்டு, தங்கள் தலைகளை உயர்த்துவார்கள். (லூக். 21:26). அந்நாளில், இக்கட்டு வரும்போது, கர்த்தர் தம்முடைய ஜனங்களை நிகழ்கால சத்தியத்தால் போஷிப்பார்.

வசனம் 9 இவ்வாறு கூறுகிறது, "**சீயோன் என்னும் சுவிசேஷகியே** (எலியா வகுப்பாராகிய அதன் கடைசி ஜீவனுள்ள அங்கத்தினராலும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் ஒரே சபையானவர்கள், இவர்கள் மாத்திரமே இழந்து திரும்பக்கொடுத்தலின் நற்செய்தியை அறிந்தவர்களும் அறிவிக்கக்கூடியவர்களுமானவர்கள்), **நீ உயர்ந்த பர்வதத்-தில் ஏறு** (சபையானது, தேவனுடைய ராஜ்யம் அல்லது பர்வதத்தைப் போல மகிமைப்படுத்தப்படுவதாக; கிறிஸ்துவுக் குள் மரித்தவர்கள் அவருடைய மகிமையான சாயலில்




விழித்தெழுந்திருப்பார்களாக; உயிரோடிருக்கிறவர்கள் மற்றவர்களைப்போல் நித்திரையடையாமல் அவர்கள் மரிக்கும்போதே மறுரூபமாவார்களாக; இவ்வாறாக வாக்குத்தத்தங்கள் நிறைவேறட்டும்-‘கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்’என்பது நிறைவேறட்டும் – வெளிப்படுத்தல் 14:13]; **எருசலேம் என்னும் சுவிசேஷகியே, நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு, பயப்படாமல் சத்தமிட்டு** [மணவாட்டியாகிய சபை, கர்த்தருடன் மகிமைப்படுத்தப்பட்ட பிறகு, ஆபிரகாமினுடைய மாம்சீக வித்தின் உண்மைத்துவமுள்ளவர்கள், தேவன் அவர்களுக்காக எழும்பப்பண்ணும் தலைவர்களின் நிமித்தம் உலகத்தின் முன்னிலையில் முக்கியத்துவம் பெறத் துவங்குவார்கள்], **யூதா** (தேவனுடனான உடன்படிக்கை உறவில் இருப்பவர்கள் அனைவரும்) **பட்டணங்களை நோக்கி: இதோ, உங்கள் தேவன் என்று கூறு!**”

ஏசாயா 40:10 இவ்வாறு கூறுகிறது: “**இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்** [பலவானாகிய சாத்தானுக்கு எதிராக]; **அவர்** [கிறிஸ்து] **தமது புயத்தினால் அரசாளுவார்: இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது: அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது.**” வசனம் 11 இவ்வாறு கூறுகிறது: “**மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை** [‘சிறுமந்தையை’] **மேய்ப்பார்: ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து** [அவருடைய உண்மைத்துவமுள்ள ஆடுகளில் மிகவும் பலவீனமானவர்களுக்கும் உதவி செய்கிறார்], **தமது மடியிலே சுமந்து கறவலாடுகளை** [பால்கொடுக்கிறவர்கள்] **மெதுவாய் நடத்துவார்.**” பால்கொடுக்கிறவர்கள், கர்த்தருடைய ஆடுகளில் உள்ள போதகர்களையும் சுவிசேஷகர்களையும் அடையாளப் படுத்துகிறார்கள். இந்த கர்த்தருடைய நாளானது அத்தகையவர்களுக்கு விசேஷித்த சோதனையின் காலமாக இருக்கப் போகிறது (மத். 24:19); ஆனால் உண்மைத்துவமுள்ள ஆடுகளாக இருக்கும் அனைவரும் மாபெரும் மேய்ப்பரால் மிகவும் மென்மையாகவும் கவனமாகவும் நிகழ்கால சத்தியத்திற்குள் வழிநடத்தப்படுவார்கள்.

மேற்கூறியவற்றிலிருந்து, ஏசாயா 40 ஆயிரவருட யுகத்திற்கு, பெருமளவில் பெசிலியா காலக்கட்டத்திற்குப் பொருந்தும் என்பதை ரசல் போதகர் தெளிவாகக் காட்டினார், அப்பொழுது கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும். “**நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்**”(வசனங்கள் 6-8) என்பதால், மாம்ச இஸ்ரயேலர்கள், அற்ப ஆயுசுள்ள மனிதர்களை நம்பாமல் (ஏனென்றால் “மாம்சமெல்லாம் புல்”), தேவனை நம்பும்படி ஊக்குவிக்கப்படுகிறார்கள். சாபத்தின் காரணமாக மனுக்குலம் வெட்டப்பட்ட புல்லைப் போல் இருக்கிறது, மேலும் தீமையினுடைய அனுபவத்தின் கொடூரமான வெப்பம் புல்லைச் சுட்டெரிப்பதுபோல் உருவகமாக அவர்களை சுட்டெரித்தது. ஆனால் இயற்கையில் வெட்டப்பட்ட மற்றும் எரிக்கப்பட்ட புல் அதன் மீது பொழியும் ஏராளமான மழையால் புத்துயிர் பெற்று மீண்டும் தழைப்பதுபோல, கிறிஸ்துவிடமிருந்து இறங்கி வரும் ஆயிரவருட யுக சத்தியம், மரண தண்டனையால் அறுப்புண்டதும் தீமையின் அனுபவத்தால் அழிக்கப்பட்டதுமான மனித இனம், புத்துயிர் பெற்று அதாவது, இழந்து போனதை திரும்பகொடுத்தலினால் மீண்டும் தழைக்கச்செய்யப்பட வேண்டும். (அப்போஸ்தலர் 3:19-21). “**புல்லறுப்புண்ட வெளியின்மேல் பெய்யும் மழையைப்போலவும், பூமியை நனைக்கும் தூறலைப்போலவும் இறங்குவார்.** [கிறிஸ்து]” (சங். 72:6). தேவனுடைய வார்த்தையே (சத்தியம் - யோவா. 17:17) உண்மையான கோட்பாட்டு உபதேசமாயிருக்கிறது. “**மழையானது இளம்பயிரின்மேல் பொழிவதுபோல, என் உபதேசம் பொழியும்: பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல, என் வசனம் இறங்கும்.**” (உபா. 32:2).

## மகத்தான தேவன், யேகோவா

இயேசு கிறிஸ்துவின் மூலமாக, தனது எல்லையற்ற அன்பினால், மேய்ப்பனைப் போலத் தமது மந்தையை மேய்த்து, ஆட்டுக்குட்டிகள் உட்பட தனது ஆடுகளை மிகவும் கவனமாகவும் மென்மையாகவும் பராமரிக்கும் இந்த மகத்தான தேவன் எப்படிப்பட்டவர்? அவர் பிரபஞ்சத்தை உண்டாக்கிய சர்வவல்லமையுள்ள தேவன். அவரே மகத்தான முதல் மூலகாரணர், அவருடன் யாரையும் ஒப்பிட முடியாது. அவர் தனது சர்வ வல்லமையால், தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளந்து, வானங்களை ஜாணளவாய்ப் பிரமாணித்து; பூமியின் மண்ணை மரக்காலில் அடக்கி, பர்வதங்களைத் துலாக்கோலாலும், மலைகளைத் தராசாலும் நிறுப்பவர்; அவரால் ஜாதிகள் ஏற்றச்சாலில் தொங்கும் துளிபோலவும், தராசிலே படியும் தூசிபோலவும் எண்ணப்படுகிறார்கள்; சகல ஜாதிகளும் அவருக்கு முன்பாக ஒன்றுமில்லை, அவர்கள் சூனியத்தில் சூனியமாகவும், மாயையாகவும் எண்ணப்படுகிறார்கள். (வசனங்கள் 12, 15, 17).

அவருடைய நீதியின் பரிபூரணத் தரம் எவ்வளவும் மீற முடியாததாக இருப்பதால், லீபனோனின் பகுதி முழுவதும் ஒரு பலிபீடமாக மாற்றப்பட்டு, அதன் மீது ஏராளமான தேவதாரு மற்றும் கேதுரு மரங்கள் குவிக்கப்பட்டு, அதில் ஆயிரக்கணக்கான மிருகங்கள் பலிகளாகக் கொடுக்கப் பட்டிருந்தாலும், வீழ்ச்சியடைந்த மனுக்குலத்தை நீதிமானாக்குவதற்கு இது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்காது ஒரு தகன பலிக்குப் போதுமானதாக இருக்காது. வசனம் 16; எபி. 10:4). யேகோவா தேவன் சர்வ ஞானத்தின் தேவனாகவும் இருக்கிறார். அவரே யுகங்களைப் பற்றிய மகத்தான



**அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்.**
**பிரசங்கி. 3:11**

ஏற்பாட்டின் ஆக்கியோன். மனிதனின் இரட்சிப்புக்காக என்ன திட்டமிட வேண்டும் அல்லது என்ன செய்ய வேண்டும் என்பதை அவருக்கு கற்பிக்க, அவரது சர்வஞானத்தில், எந்த ஆலோசகரும் தேவையில்லை. (எபி. 7:19; 10:1-14).

மனித புத்திக் கூர்மையானது திட்டங்களை (பரிணாம வளர்ச்சியால் ரட்சிப்பு, மனிதாபிமானம் மற்றும் பிற பணிகள், உயர்கல்வி, சட்டம் போன்றவைகளை) மிகுந்த கவனத்துடன் உருவாக்கி, அவற்றை முடிந்தவரை கவர்ச்சிகரமானதாக மாற்றுகிறது (வசனம் 19); விழுந்துபோன மனிதன், உண்மையான ஞானத்தில் குறைவுற்றிருந்தாலும், பொது-வாகச் சொல்வதானால் மனிதனால் உருவாக்கப்பட்ட திட்டங்கள், தவறு ஏற்பட வாய்ப்பில்லாதவை என்றும், தோல்வியடைய முடியாது என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள், மேலும் உறுதியாகவும் ஸ்திரமாகவும் ஏற்படுத்தப்-பட்ட அஸ்திவாரத்தைக் கொண்டதாகவும், அசைக்க முடியாதவை என்றும் அவர்கள் நினைக்கக்கூடிய சட்டங்களையும் விதிமுறைகளையும் உண்டாக்குகின்ற திறமையான தலைவர்களையும் தேடுகிறார்கள் (வசனம் 20). ஆனால் “**அவன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லையென்பதே.**” (சங். 10:4). தேவனுடைய வார்த்தை ஆரம்பத்திலிருந்தே மனுக்குலத்தின் இரட்சிப்புக்கான அவரது திட்டத்தைச் உரைத்திருக்கிறது. ஆனால் பொது-வாகவே “**உணர்வுள்ளவன் இல்லை: தேவனைத் தேடுகிறவன் இல்லை.**” (ரோம. 3:11).

மதச்சார்பற்ற துறையில், அனைத்துமே இல்லா-விட்டாலும், பெரும்பாலான சிறந்த கண்டுபிடிக்கும் செயல்முறைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் அனைத்தும் இணங்கிப் போகாத ஆங்கிலேய திருச்சபைக் கொள்கையை ஒப்புக்கொள்ளாதவர்களால் (non conformists) உண்டாக்கப் பட்டவையாகும்: கொலம்பஸ் (Columbus) ஒரு இத்தாலிய ஆராய்ச்சியாளர் மற்றும் கடல்வழி வல்லுநர்; குட்டன்பெர்க் (Gutenberg) எழுத்துக்களை அச்சுக்கோர்க்கும் முறையைப் பயன்படுத்தி அச்சிடும் இயந்திரத்தை உருவாக்கிய ஜெர்மானிய கைவினைஞரும் கண்டுபிடிப்பாளருமானவர்; சர். ஐசக் நியூட்டன் (Sir Isaac Newton) வகையீட்டு மற்றும் கூட்டு கணக்கீட்டிற்கான (differential and integral calculus) அடித்தளத்தை அமைத்தவர்; கலிலியோ (Galileo) இத்தாலிய வானியியலாளர் (நமது சூரிய குடும்பம் மற்றும் பால்வழி அண்டம் பற்றிய கலிலியோவினுடைய கலிலியின் தகவல்கள், பிரபஞ்சத்தில் நம்முடைய இடத்தைப் பற்றிய நமது புரிதலில் புரட்சியை ஏற்படுத்தின, எலியாஸ் ஹோவ் (Elias Howe) ஒரு அமெரிக்க கண்டுபிடிப்பாளராவார், அவரது தையல் இயந்திரம் தொழிற்சாலையிலும் வீட்டிலும் ஆடை உற்பத்தியில் புரட்சியை ஏற்படுத்த உதவியது. மோர்ஸ் (Morse) ஒரு உருவப்பட ஓவியராக தனது வாழ்க்கையைத் தொடங்கினார், ஆனால் தொலைபேசி கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்னர் தொலை தூரங்களில் தொடர்பு கொள்ள முதன் முறையாக இருந்த ஒற்றை-கம்பி தந்தி முறையை கண்டுபிடித்ததற்காக பிரபலமானார். ஸ்டைன்மெட்ஸ் (Steinmetz) மின்னல் தாக்குதலைக் குறித்துப் படிக்கும்போது மின் பரிமாற்றங்கள் எனும் கோட்பாட்டை நிறுவினார். இந்த பயண அலைகள் பற்றிய அவரது ஆய்வுகள் இறுதியில் உயர்-மின் கடத்தும் இணைப்புகளுக்கான பாதுகாப்பு சாதனங்களைக் கண்டுபிடிக்க வழிவகுத்தன. இவை அனைத்துமே இணக்கமில்லாதவர்களால் அல்லது கிறிஸ்தவ சமய மரபை மீறுபவர்களால் ஆனது. பெரும்பாலான அரசியல் சீர்திருத்தங்கள் எல்லாம் இணக்கமற்றவர்களால் தூண்டப்பட்டன.

இணக்கமற்றவர்கள் என்பதின் (Non conformists) பெயர்ச்சொல் விளக்கம்: ஸ்தாபிக்கப்பட்ட சபையின் சடங்குகள் மற்றும் ஆராதனை முறைக்கு ஒத்துப்போகாமல் புறக்கணிப்பவர் அல்லது பின்பற்ற மறுக்கிற ஒருவர். நோவா (அவரது காலத்தில் கேலிக்குரியவராக இருந்தார்), மோசே, கிதியோன், சாமுவேல், தாவீது, எலியா, ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியல், யோவான் ஸ்நானகன், இயேசு கிறிஸ்து (எல்லா காலத்திலும் இருந்தவர்களை விடவும் யூத பாரம்பரிய முறைக்கு மிகவும் இணக்கமில்லாதவர்), மற்றும் இன்றுவரை உள்ள அனைத்து சீர்திருத்தவாதிகள் மற்றும் உண்மையில் சத்தியம் மற்றும் நீதியின் பொருட்டு விமர்சிக்கப்பட்ட, கேலி செய்யப்பட்ட, அவதூறாகப் பேசப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, துன்புறுத்தப்பட்ட மற்றும் இரத்த சாட்சியாக மரித்த பலரைக் கருத்தில் கொள்ளுங்கள், இவர்கள் பொதுவாக அநேகரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களுக்கும் நடைமுறைகளுக்கும் ஒத்துப் போகாததால் இணக்கமில்லாதவர்களானார்கள்.

பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளை செய்யக் கூடிய மிகவும் ஆபத்தான பழக்கங்களில் ஒன்று சாக்குப்போக்குகளைச் சொல்வது. நம்முடைய கர்த்தர் இச்செயலை தனது மாபெரும் இராப்போஜனத்தின் உவமையில் (லூக். 14:15-24) கண்டித்தார். சாக்குப்போக்கு-களை உருவாக்குவது, - உதாரணமாக, தேவனுடைய அனைத்து ஆலோசனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்குக் கீழ்ப்படிந்து அவற்றை நம்முடைய அன்றாட ஜீவியத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியத்தை நாம் எதிர்கொள்ள வேண்டியதில்லை என்பதற்காக சாக்கு-போக்குகளை உருவாக்குவது எவ்வளவு எளிது என்பதை நாம் அறிவோம். பொதுவான மனப்போக்கு “கூட்டத்துடன் சேர்ந்து செல்வதாகும்.” இணக்கமில்லாதவர்களாக இருப்பதற்கு தைரியமும் மன உறுதியும் தேவை. அவர்களில் யாரெல்லாம் “கூட்டத்தோடு சேராதவர்களோ”அவர்கள் விசித்திரமானவர்களாகவும், இயற்கைக்கு மாறானவர்க

ளாகவும், மனதளவில் சற்று குறைபாடுள்ளவர்களாகவும் கூட கருதப்படுகிறார்கள்.

தேவன் வானங்களை மெல்லிய திரையாகப் பரப்பி, அவைகளைக் குடியிருக்கிறதற்கான கூடாரமாக விரித்துள்ளார், பூமியின் குடிமக்கள் எவ்வளவு தான் சுயகருத்து அல்லது தற்பெருமை கொண்டவர்களாக இருந்தாலும், அவருடைய பார்வையில் வெட்டுக்கிளிகளைப் போல இருக்கிறார்கள். (ஏசாயா 40:22). 1 கொரி. 3:19-ல், "**இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே, ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறார்**" என்று எழுதியிருக்கிறது. இக்கட்டுக் காலத்தில் சாத்தானின் சாம்ராஜ்யத்தைக் கவிழ்ப்பதன் மூலம், பூமியின் பெலவான்களையும் ஞானிகளையும் தேவன் அழிக்கிறார் (வசனம் 23); அவர்கள் திரும்ப நாட்டப்படுவதுமில்லை, விதைக்கப்படுவதுமில்லை; அவர்களுடைய கூட்டம் புதிய சமுதாய ஒழுங்கு முறையில் ஆட்சி செய்யாது; இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகின் பூமிக்குரிய அமைப்புகளின் மகிமையும் அதிகாரமும் துரும்பைப்போல் மறைந்துவிடும் (வசனம் 24). வீழ்ச்சியடைந்த மனுக்குலத்திற்கும் தேவனுக்கும் இடையிலான வேறுபாட்டைப் பற்றிய சத்தியத்தை முன்வைத்த பிறகு (வசனங்கள் 19-24), வசனம் 18-ன் கேள்வி மீண்டும் கேட்கப்படுகிறது (வசனம் 25). பின்னர் நமது சிருஷ்டிகரின் மகத்துவத்தைப் பற்றிய கூடுதல் நினைவூட்டல் கொடுக்கப்படுகிறது: பரலோகத்திற்குரிய மேனிகளும் அவர்களுடைய அற்புதமான அணிவகுப்பும் தேவன் அவருடைய சர்வ ஞானத்திலும் சர்வவல்லமையிலும் அவைகள் அனைத்தையும் எவ்வாறு கட்டளையிடுகிறார் என்பதையும் ஒவ்வொன்றிற்கும் எவ்வாறு அதன் தனிப்பட்ட பண்புகளை தீர்மானிக்கிறார் என்பதையும் அவருடைய எல்லையற்ற வல்லமையினிமித்தம் "**அவைகளில் ஒன்றும் தவறுவதில்லை**" என்பதையும் கருத்தில் கொள்ளும்படி நமக்கு குறிப்பிட்டிருக்கிறது. (வசனம் 26). அப்படியானால், மாம்ச அல்லது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாக உள்ள எவரும் தேவன் அவர்களைக் கவனிக்கவில்லை என்றும், அவர்களுடைய நோக்கமும், அவர்களுடைய விடுதலையும் கவனிக்கப்படாமல் அவருடைய கவனத்திலிருந்து தப்பிக்கக்கூடும் என்றும் ஏன் நினைக்க வேண்டும் (வசனம் 27)?

பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த அநாதி யேகோவாதேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை என்பதையும், அவருடைய புரிதலின் ஆழமும், அவருடைய அறிவும் அவருடைய ஞானமும் அளவிட முடியாதது என்பதையும் நாம் அறிந்திருக்கவில்லையா (ஏசா. 40:28; ரோம. 11:33,34)? அவருடைய எல்லையற்ற வல்லமையில், பலவீனமானவர்களுக்கும், இளைப்படைந்தவர்களுக்கும் தேவையான ஒவ்வொரு பலத்தையும் அவர் வழங்குகிறார், ஆனால் அவரில் நம்பிக்கையுள்ளவர்களுக்கே வழங்குகிறார். (வசனம் 29). இந்த உலகத்தில் பலவான்களாக இருந்தாலும் தங்கள் சொந்த பலத்தினாலே நிற்கிறவர்களாயிருந்தால், சோர்ந்துபோவார்கள் மற்றும் இளைப்படைவார்கள்; அவர்கள் தங்கள் வீழ்ச்சியை நோக்கிச் செல்கிறார்கள், முற்றிலும் தோல்வியடைவார்கள் (வசனம் 30). ஆனால் தேவனுடைய வழிகளைக் கவனமாகச் சிந்தித்து, அவரது வழிநடத்துதலைப் பின்பற்றுகிறவர்கள், தங்களுக்குத் தேவையான அனைத்து பெலனையும் அவரிடமிருந்து பெறுவார்கள் (2 கொரி. 12:9); "**கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்: அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.**" (வசனம் 31).

## தேவன் நியாயத்தீர்ப்புக்கு தேசங்களை அழைக்கிறார்

1874 முதல், பூமியின் கடையாந்தரப் பகுதிகளிலும் உள்ள அனைத்து தேசங்களையும், தமக்கு முன்பாக மௌனமாக இருக்குமாறு அழைத்துக் கொண்டிருக்கிறார் (ஏசாயா 41:1), அதாவது, அவர்கள் தங்களை "சோர்வடையச் செய்த" (எரேமியா 51:58; ஆப. 2:13) அவர்களுடைய ஆரவாரமான திட்டங்கள் மற்றும் தீவிரமான முயற்சிகளை நிறுத்துமாறு தேவன் அழைத்துக் கொண்டிருக்கிறார். அவர்கள் "புதுப்பெலனடைய" (ஏசாயா 40:31), அதாவது, அவர்களின் மன வலிமை மற்றும் பகுத்தறியும் திறன்களால், தங்களை நீண்ட காலமாக அடிமைத்தனத்தில் வைத்திருந்த கோட்பாட்டு உபதேசம் மற்றும் செயல்பாடுகளின் தப்பறைகளையும் மற்றும் முன்கூட்டிய தப்பர்த்தம் கொள்ளுதலையும் ஜெயம்கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். மகா உபத்திரவக் காலம் தொடர்பாக தேவன் என்ன செய்கிறார் என்பதைக் கருத்தில் கொள்ளுமாறும், எந்தவொரு கூற்றையும் முன்வைப்பதற்கு முன்பு ஆதாரங்களை உன்னிப்பாகவும் கவனமாகவும் பார்க்குமாறும் அவர்களுக்கு சொல்லப்படுகிறது. "நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கில்" நீதி விசாரணைக்கு தேவன் அவர்களை அழைத்துள்ளார். நியாயத்தீர்ப்பு வருவதையும் மனுக்குலத்தின் மீது பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதையும் முன்னறிவித்த சிறு தீர்க்கதரிசிகளில் ஒருவரான யோவேல், நெகேமியாவின் சிறையிருப்புக்கும், அவரது பணிக்கும் பின்னர் வாழ்ந்ததாகத் தெரிகிறது. யோவே. 3:14 இவ்வாறு கூறுகிறது: "**நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே ஜனங்கள் திரள்திரளாய் இருக்கிறார்கள்: நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது.**" 1874 முதல் தேசங்கள் பிரமாண்டமான போர் ஏற்பாடுகளைச் செய்துள்ளன, இது, கர்த்தருடைய மகா நாளின் முதல் கட்டமும், பழிவாங்கும் நாளுமாகிய மகா உலக யுத்தத்திற்கு (கட்டங்கள் I மற்றும் II உட்பட), வழிவகுத்தன. தேவன் தேசங்களுக்கு எதிராக ஒரு பிரதிகூலமான தீர்ப்பை வழங்கியுள்ளார், மேலும் அவர்கள் அழிவுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். (செப். 3:8). அமெரிக்கா 2025-ம் ஆண்டில் பாதுகாப்புத் துறைக்கு $849.8 பில்லியன் டாலர்களையும், எரிசக்தித் துறைக்கு $51 பில்லியன் டாலர்களையும் ஒதுக்குவதற்கு திட்டம் செய்துள்ளது.

**“ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.”– ரோமர் 8:18**

யோவேல் 3:9-ஐ சற்று விரிவாக ஆராய்வோம்: “**இதைப் புறஜாதிகளுக்குள்ளே கூறுங்கள்: யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணுங்கள், பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள்: யுத்தவீரர் எல்லாரும் சேர்ந்து ஏறிவரக்கடவர்கள்.**” யேகோவா தேவனுடைய தீர்மானம் ஜாதிகளைச் சேர்த்து, அவர்கள் மீது [புறஜாதிகள், ‘தேசங்கள்’] தனது உக்கிரத்தை ஊற்றுவ தாகும் (செப். 3:8). இந்த லவோதிக்கேய காலகட்டத்தில் இந்த வேலை நிறைவேற்றப்படுகிறது. யோவே. 3:9-16-ன் அடுத்தக்கட்ட நிறைவேற்றத்திற்கு அநேக சான்றுகள் உள்ளன: “**யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணுங்கள், பராக்கிரம சாலிகளை எழுப்புங்கள்... உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்: பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக.**” பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு சத்தியம் இருளடைதல் பற்றியும் ஆவி மண்டல கட்டுப்பாட்டு அதிகாரங்கள் மற்றும் இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகின் சமுதாய ஒழுங்குகளை அசைப்பது பற்றியும் அதே தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது, இவை நடப்பதை நாம் காண்கிறோம். மற்றொரு மகாபெரிய போர் நடக்குமா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது. யோவே. 3:14-ல் நமக்கு இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது: “**நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே** [சோதனை, இக்கட்டு] **ஜனங்கள் திரள்-திரளாய் இருக்கிறார்கள்: நியாயத்தீர்ப்பின் பள்ளத் தாக்கிலே கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது.**” **சூரியனும் சந்திரனும்** (சுவிசேஷமும் நியாயப்பிரமாணமும்) **இருண்டுபோகும், நட்சத்திரங்கள்** [போதகர்கள், குறிப்பாக அப்போஸ் தலர்கள்-வெளி. 12:1] **ஒளிமங்கும். கர்த்தர் சீயோனிலிருந்து** [தேர்ந்தெடுக்கப்பட்ட சபை] கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து [மீட்டெடுக்கப்பட்ட இஸ்ரயேல்] சத்தமிடுவார்; வானமும் [பெயரளவிலான சபை] பூமியும் [சமுதாயம்] அதிரும்; ஆனாலும் கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரயேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார். இதன் மத்தியில் எது நடந்தாலும், நமக்கு இவ்வசனத் திலுள்ள ஆறுதலின் நிச்சயம் இருக்கிறது, “**கர்த்தர் தமது ஜனத்துக்கு** (நம்பிக்கையாக - hope) **அடைக்கலமாக இருப்பார்.**” (வசனம் 16).

உபத்திரவம் மற்றும் போதனைகள் மூலம், தேசங்களின் கவனத்தையும் பல விஷயங்களைப் பற்றிய பரிசீலனைக் கேள்விகளையும் தேவன் எழுப்புகிறார்: நீதியின் சூரியனாய் எழும்புகிறவரும் (கிழக்கிலிருந்து, ஏசா. 41:2; மல். 4:1-3) நீதியுள்ளவருமான, மாபெரும் மீட்பர் (தானி. 12:1; ஏசா. 2:19, 21) ஆளுகை செய்வதற்கு காரணமாய் இருக்கிறது யார்? அவருடைய கட்டளையை நிறைவேற்ற இந்த நீதியுள்ளவரை அழைத்தவர் யார்? சகல ஜாதிகளின் மீதும், சகல ராஜாக்களின் மீதும் அதிகாரத்தை அவருக்குக் கொடுத்தவரும் (தானி. 7:14), இந்த மகா உபத்திரவ காலத்திலே அவர்களை அவருடைய பட்டயத் துக்குத் தூசியும், வில்லுக்குச் சிதறடிக்கப்பட்ட தாளடியுமாக்கி அவர்களைக் கவிழ்க்கவும் (சங். 2:8, 9; தானியேல் 2:34,35), தன் கால்கள் நடவாதிருந்த பாதையிலே (ஏசா. 41:3) காயமடையாமல் இருக்கவும் அவருக்கு சகாயம் புரிபவர் யார்? இவைகளையெல்லாம் உண்டுபண்ணி, அவைகளை நடப்பித்தவர் யார்? ஆதியும் அந்தமும் இல்லாத (ஏசா. 41:4) ஒருவராகிய யேகோவா தேவனிட மிருந்தே இவை அனைத்தும் வருகின்றன, அவர் எப்பொழுதும் அவருடைய நோக்கங்களையெல்லாம் நிறைவேற்றுகிறார் (ஏசா. 46:10) என்பதாக தேசங்களுக்கு பதில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆயிரவருட யுகத்தின் பணிகள் அதன் முன்னேற்ற மடைந்து வரும் சத்தியங்களுடன் இன்றுவரை தொடர்-கின்றன. “**கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும் சேர்ப்பதன் மூலம்** (ஏசாயா 28:10, 13) ஏற்கனவே கர்த்தர் சத்தியத்தின் மேல் அதிகப்படியான சத்தியத்தை அடுக்கி வைத்துள்ளார் (PT’35, பக்கம் 87)” என்கிற ஜாண்சன் போதகரின் அறிக்கையை பைபிள் ஸ்டாண்டர்ட் ஊழியங்கள் [LHMM] தொடர்ந்து பின்பற்றி வருகிறது. இரவிலே பனிபெய்யும்போது மன்னா விழுவது சத்தியத்தின் படிப்படியான வளர்ச்சியைக் குறிக்கிறது (நீதிமொழிகள் 4:18), இது சங்கீதத்தில் வெளிப்படுத்தப்பட்ட சிந்தனையை எப்போதும் நமக்கு நினைப்பூட்டுகிறது. “இன்னும் தொடர வேண்டியவை அநேகம் உள்ளன.” ஆம், ஆக்கபூர்வமான முன்னேற்றமடைந்து வரும் சத்தியம் தேவனுடைய ஜனங் களின் தேவைக்கு ஏற்ப அமைக்கப்படுகிறது! லவோதிக்கேய பிரதான தூதர்களால் எழுதப்பட்ட பிரசுரங்கள், ரசல் போதகர் மற்றும் ஜாண்சன் போதகர் ஆகியோரின் எழுத்துக்களின் தழுவல்களுடன் நமது தற்போதைய தேவைகளுக்கு பொருந்துமாறு உபயோகிக்கப்படும்.

1954 ஆம் வருட துவக்கத்தில், தேவன் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர் வகுப்பை அதன் இடத்தில் முன்வைத்தார். அவர்கள் கிறிஸ்துவில் அவருடைய கிருபையை ஏற்றுக்கொண்டு தங்களை பிரதிஷ்டை செய்துகொள்ளும் காலம் வரை, அவர்களின் முதன்மை-யான இழுத்துக்கொள்தலும் அழைப்பும் பிதாவிடமிருந்து வருகிறது. இந்தக் கருத்தாய்வு யோவா. 6:44-ல் கொடுக்கப்பட்டுள்ளது, “**என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால்** (அழைக்காவிட்டால்) **அவன் என்னிடத்தில் வரமாட்டான்: கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்.**” கிறிஸ்துவின் ஆயிரவருட யுக மத்தியஸ்த ஆட்சி துவங்கும் வரை, இந்த விரிவாக்கப்பட்ட சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுப்பு அல்லது தேர்ந்தெடுப்பின் வேலை நடைபெறுகிறது. இந்த விசேஷித்த அழைப்பைப் பற்றிய ஒரு தனித்துவமான தன்மை உள்ளது. பிதா இப்போது மனுக்குலம் முழுவதையும் இழுக்கவில்லை என்பதை நாம் உணர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்! வெளி 22:17-ல்

குறிப்பிடப்பட்டுள்ள காலம், அப்போது ஜீவத் தண்ணீர் இலவசமாய் பாயும், விருப்பமுள்ளவன் வரக்கடவன் என்றும் உலகத்தை இழத்துக்கொள்ளும் வேலை அடுத்த யுகத்திற் கானது; அது இன்னும் வரவில்லை. அழைக்கப்பட்ட வகுப்பினருக்கான செய்தியைப் பொறுத்தவரை எவ்வாறாக இருப்பினும், காரியம் வேறுபட்டதாயிருக்கிறது.

சாலொமோனின் ஞானத்தைத் தேடும் சேபாவின் ராஜஸ்திரீயிலும் (1 ராஜா. 10:1-13; 2 நாளா. 9:1-12), எருசலேமின் ஓஃபேல் குன்றிலும், ஆயிரவருட யுக பிரபுக்களின் உதவியாளர்களிலும், ஏசா. 56-ன் அண்ண கர்களிலும் நிகழ்கால பிரதிஷ்டையாளர்கள் அடையாளப் படுத்தப்படுகிறார்கள். புதிய உடன்படிக்கையின் கீழ் அவர்களின் ராஜ்ய சுதந்தரத்தில், அவர்கள் நிறைவேறுத லான மூன்றாவது பிறந்த கேத்தூராளின் குமாரன் மேதானிலும், (ஆதி. 25:2), யோர்தான் நதிக்கு மேற்கே அதன் சுதந்தரத்தைக் கொண்டிருந்த மனாசேயின் பாதி கோத்திரத்திலும் (எண். 32; யோசு. 1:12-15), மிரியாமிலும், குறிப்பாக செங்கடலில் பார்வோன் மற்றும் அவனது சேனைகள் வீழ்த்தப்பட்டபின் விடுதலையின் துதி பாடலில் இஸ்ரயேலின் பெண்களை வழிநடத்துவதிலும் (யாத். 15; E.Vol.11, பக்கம் 276-296) சித்தரிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு பொதுவான இழந்து போனதைத் திரும்பப் பெறும் வகுப்பினரை விட மிக அதிகமானதும், உயர்வானதும் மற்றும் மகத்தானதுமான வாய்ப்புகள் இருக்கின்றன. நிகழ்கால பிரதிஷ்டையாளர்கள் (உண்மைத்துவமுள்ள வர்களாக இருக்கிறவர்கள்) மூப்பரான பாத்திரவான்களைப் போலவே, அற்புதமான பிரகாசிப்பிக்கப்படுதலையும் (தேவனுடைய வார்த்தையின் “ஆழமான விஷயங்களைப்” பற்றிய புரிதல் உட்பட), இருதயம் அனல்கொள்தலையும், உற்சாகமளிக்கும் பரிசுத்த ஆவியையும் பெற்றுள்ளனர்.

தேவனுடைய ஆழமான விஷயங்களைப் பற்றி நாம் பேசும்போது, தேவனுடைய ஜனங்களிடையே அறிவு மிகவும் உயர்வாக மதிக்கப்பட வேண்டும், முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஒரு சான்றாக அது கருதப்பட வேண்டும்; ஏனென்றால், ஒருவன் அறிவிலே வளரவில்லையெனில், “**கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும்**” (எபே. 6:10) வளர முடியாது, அதாவது – கிருபையிலும் – வளர முடியாது. தேவனுடைய ஆழமான காரியங்களில் மேலும் மேலும் வழிநடத்தப்படுவதன் மூலம், தேவன் மற்றும் அவருடைய சத்தியத்தின் மீதான அன்பை வெளிப்படுத்து பவர்களை நாம் மிகவும் உயர்வாக மதிக்கிறோம். ஆம், கர்த்தருடைய ஜனங்கள் தேவ ஆவியினால் தூண்டப்பட்டு எழுதப்பட்ட வேத வார்த்தை மற்றும் அவருடைய பரிசுத்த ஆவியின் செயல்பாடு ஆகிய இரு காரியங்களினால் உண்டான செய்தியை நன்மைக்கான தேவனுடைய வல்லமைமிக்க செல்வாக்காக, தங்களின் இருதயத்திலும் மனதிலும் கொண்டுள்ளனர். தேவனுடைய இரகசியங்கள் இப்போது அவருடைய கண்காணிகளாகிய உண்மைத்து வமுள்ள பிள்ளைகளுக்கு, வெளிப்படுத்தப்பட்டுள்ளன;

**வேதாகமம் சத்தியத்தைக் கொண்டு உங்களைக் கடிந்துகொள்ளலாம், ஆனால் அது ஒருபோதும் ஒரு பொய்யைக் கொண்டு உங்களை ஆறுதல்படுத்தாது.**

மேலும் “தேவனுடைய ஆழமான விஷயங்களை” பற்றிய தெளிவான புரிதல் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது, அவற்றில் சில அம்சங்கள் அறுவடை காலத்தின் கடைசி இரண்டு நட்சத்திர அங்கத்தினர்களுடைய – அதாவது, லவோதிக்கேய சபை தூதனுடைய ஊழியத்தின் மூலம் வெளிவரும் வரை வெளிப்படுத்தப்படவில்லை (வெளிப்படுத்துதல் 3:14). கடந்த யுகங்களில் கர்த்தருடைய ஊழியர்களால் எழுதப்பட்ட விஷயங்கள், “**உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது**” என்று பவுல் அப்போஸ்தலர் மூலமாகவும் நமக்குக் கூறப்பட்டுள்ளது. (1 கொரி. 10:11).

சேபாவின் ராஜஸ்திரீ வகுப்பைப் பற்றி நாம் பேசும்போது (பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக் காரர்களில் மிக உயர்ந்த நிலை), அவர்கள் யேகோவா தேவனை சேவிப்பதில் மாபெரும் பொறுப்பும் சிலாக்கியமும் உடையவர்களாய் இருப்பதை நாம் அங்கீகரிக்கிறோம். விரிவாக்கப்பட்ட சுவிசேஷ-யுக நிலைமைகள், அடையாளமே காண முடியாத இடத்திலும் நம்பிக்கை கொள்ளவும், தரிசித்து நடப்பதற்குப் அப்பாற்பட்ட நிலையிலும், விசுவாசியானவனை கொன்று போட்டாலும்கூட கர்த்தரையே நம்பும் ஒரு விசுவாசத்தைக் கோருகின்றன. பாவம் மேலோங்கியிருக்கும் வரையிலும், சாத்தான் இவ்வுலகத் தின் அதிபதியாகச் செயல்படும் வரையிலும், ஒருவன் கர்த்தருக்கு உத்தமமாக இருக்க நினைத்தால், அவன் பாவத்திற்கு எதிரான தன் எதிர்ப்பிலும், நீதியின் ஊழியத் திலும், தனது உரிமைகளை மரணபரியந்தம் பலியிட வேண்டியது அவசியமாயிருக்கும். இளைப்படையச் செய்து ஜீவனைப் பறிக்கின்ற பொல்லாத நிலைமைகளான அப்படிப்பட்டதான போக்குகள் கட்டாயம் எதிர்க்கப்பட வேண்டும். இப்போதைய பிரதிஷ்டையில் உண்மைத்துவ மாக இருப்பதற்கு, தனக்குரிய அனைத்தையும் தேவனுக் கென்று அர்ப்பணிப்பவருடைய மரணத்திற்கு வழிநடத்தும் சூழ்நிலைகளுக்கு மத்தியில் ஒருவர் தேவனுடைய ஊழியத்தில் தனது அனைத்தையும் சமர்ப்பிக்க வேண்டியது அவசியப்படுகிறது. தற்போதைய நிலைமைகள் விசுவாசி-களுக்கு மரணத்தை வழங்குவது மட்டுமல்லாமல், அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு ஊழிய உடன்படிக்கையை உருவாக்க, அதாவது, சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித்து தேவனுக் கென்று பிழைத்திருப்பதற்கு அழைக்கப்படுகிறார்கள். பரிசுத்தப் பெரும்பாதை திறக்கப்படுவதற்கு முன்பே, தங்களுக்கான கிரீடத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு மிகவும் தாமதமாகப் பிரதிஷ்டை செய்பவர்கள், ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதலால் பிரதிஷ்டையானது ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களிடமிருந்து வேறுபட்ட ஒரு

பிரதிஷ்டையைச் செய்கிறார்கள் என்று வேத வாக்கியங்களில் சிறிதளவும் கூட குறிப்பிடப்படவில்லை.

இறுதியான ஒப்புமையில், சேபா ராஜஸ்திரீ வகுப்பைச் சேர்ந்த அனைவரும் பிரதிஷ்டை செய்திருப்பார்கள், பின்னர் அவர்கள் அனைவரும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களில் சேர்க்கப்படுவார்கள். மறுபுறம், பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் அனைவருமே சேபா ராஜஸ்திரீ வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கமாட்டார்கள். இதற்குக் காரணம், பாபிலோனில் உள்ள பலர் பரோஷியா அல்லது எபிஃபெனி சத்தியத்துடன் ஒருபோதும் தொடர்பு கொள்ளாதவர்களாக, பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர் வகுப்பாராக பிரதிஷ்டை செய்து, மரணபரியந்தம் உண்மைத்துவமுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

கர்த்தர் பரோஷியா சத்தியத்தையும், எபிஃபெனி சத்தியத்திற்கான அடித்தளத்தையும் பரோஷியா தூதரான, ரஸல் போதகர் மூலம் கொடுத்தார்; எபிஃபெனி தூதரான ஜாண்சன் போதகர் மூலம் எபிஃபெனி சத்தியத்தின் மேல் கட்டமைப்பையும் அவர் கொடுத்தார். எபிஃபெனி ஆசரிப்புக் கூடார சித்தத்தின் படி, சத்திய ஜனங்களில் பல்வேறுபட்ட குழுக்கள் இருக்கிறார்கள். பொதுவாக, பரோஷியா சத்தியத்தையும், அதைக் கொடுப்பதில் ரஸல் போதகர் கர்த்தருடைய பிரதிநிதியாக இருக்கிறார் என்பதையும் ஏற்றுக்கொள்பவர்களை சத்தியக் குழுக்களாக நாம் வரையறுக்கிறோம். நிச்சயமாக, ஒவ்வொரு குழுவிலும் உள்ள தனிநபர்கள் பரோஷியா சத்தியத்தைப் பற்றிய அறிவு மற்றும் புரிதலின் அளவில் வேறுபடுகிறார்கள்.

முதலாம் அறுவடையின்போது, பெரும்பாலானோர் புரிந்து கொள்ள முடியாத, எஜமானருடைய போதனைகளின் அர்த்தத்தை உண்மைத்துவமுள்ள சீஷர்கள் புரிந்துகொண்டதைப் போல அவருடன் இருதயப்பூர்வமான இணக்கத்தில் இருப்பவர்களுக்கு மாத்திரம், அவருடைய வார்த்தைகள் மற்றவர்களிடம் இல்லாத மதிப்பையும் வலிமையையும் கொண்டுள்ளன; முதல் வருகையைப் போலவே, இப்போது சிலர் கிறிஸ்தவ பந்தயச் சாலையில் தடுமாறி விழுந்து கொண்டிருக்கிறார்கள், மற்றவர்கள் அவர் "ஏற்றவேளையில் ஆகாரமாக" வழங்கும் சத்தியத்தால் எப்போதும் இல்லாத அளவுக்கு நெருக்கமாக கர்த்தரிடம் இழுக்கப்படுகிறார்கள். இந்த விரிவாக்கப்பட்டுள்ள அறுவடையின் முடிவை நோக்கி நாம் முன்னேறும்போது, பாதை இன்னும் தடைகளையும், அதிக கடினமானவைகளையும் உண்டாக்கி னாலும், "தடுமாறக் கூடிய" போக்குகள் அடிக்கடி ஏற்பட்டாலும் நாம் ஆச்சரியப்பட மாட்டோம். எனவே, நாம் ஒவ்வொருவரும் எதிராளியின் சூழ்ச்சிகளுக்கு எதிராக அதிகமதிகமாய் எச்சரிக்கையாக இருப்போமாக. சுய அன்பு, உலக அன்பு மற்றும் அவற்றின் பெருமை, லட்சியம் மற்றும் மதியீனத்தையும் உதறித் தள்ளிவிடுவதினால், தேவனுடைய பரிபூரண அன்பு நம் இருதயங்களில் ஆளுகை செய்வதாக. இந்த தேவ பக்தியானது நம்முடைய இருதயங்களில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்தோஷம், இளைப்பாறுதல், சமாதானம் ஆகியவற்றின் நிறைவைக் கொண்டுவருவதாக. நாம் அவரில் நிலைத்திருந்து, சிறந்த தோட்டக்காரரின் அனைத்து கிளை நறுக்குதலுக்கும் இணங்கி மிகுதியான கனிகளைக் கொடுக்கும் கனிதரும் கொடிகளாக இருப்போமாக; வஞ்சகங்கள் நம்மிடம் வந்தால், அப்போஸ்தலர்களைப் போலவே நாமும் இந்தக் காரியத்தைப் பார்த்து, "**ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே**" என்று கூறுவோமாக. ***



"வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை."
– லூக்கா. 12:2

# தேவனால் அடிக்கப்பட்டு – வாதிக்கப்பட்டார் (மாற்கு 15:22–37)

## Smitten of God - Afflicted

"**மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.**" (ஏசாயா 53:4).

இயேசு தம்முடைய சிலுவை மரணத்தை முன்னறிவித்து, யோவா. 3:14-ல், "**சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் உயர்த்தப்பட வேண்டும்**" அதாவது - சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று கூறினார். வெண்கல/தாமிர சர்ப்பம் இயேசுவின் அடையாளமாக பயன்படுத்தப்பட்டது (BS '80, பக்கம் 18-ஐ பார்க்கவும்). அவர் உண்மையாகவே பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசற்றவருமாயிருந்தார்; ஆனால் அவர் பாவிகளின் ஸ்தானத்தை எடுத்ததால் பாவியாக நடத்தப்பட்டார். நியாயப்பிரமாணத்தின் கீழ் உள்ள மிகக் கடுமையான தண்டனை சிலுவை மரணமாக இருந்தது: "**மரத்தில் தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்.**" எனவே தான், அப்போஸ்தலன் கூறுகிறார், இயேசு நமக்காக சாபமாக்கப்பட்டார். (கலா. 3:13). அவர் எந்தப் பாவத்தையும் அறியாவிட்டாலும், அவர் பாவிகளின் ஸ்தானத்தை எடுத்தார். "**இயேசு வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்.**" (1 கொரி. 15:3).

இயேசு சிலுவையில் அறையப்பட்டதோடுசம்பந்தப்



**“கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்”**
**1 கொரிந்தியர் 15:3**

பட்ட உண்மை நிகழ்வுகள் புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப் பட்டுள்ளதால் அதைப் பற்றிய சர்ச்சைக்கு இடமில்லை. ஆனால் அதன் நோக்கம் மற்றும் நன்மைகள் பற்றிய தேவனுடைய கண்ணோட்டம் குறித்து நிச்சயமாக பரவலான குழப்பம் உள்ளது. இயேசுவின் மரணம் அவர்களுடைய இரட்சிப்பு என்பதை கிறிஸ்தவர்கள் உணர்ந்தாலும், அது எப்படி என்பது குறித்தான போதுமான அளவு புரிதல் பலருக்கும் இல்லை. ஏசாயா தீர்க்கதரிசி நமக்கு தெய்வீக விளக்கத்தை அளிக்கிறார்.

இரட்சகர் தனது மூன்று ஆண்டுகால ஊழியத்தால் பெரிதும் பலவீனமடைந்திருந்தார், அதில் அவர் ஜனங் களின் நோய்களைக் குணப்படுத்துவதில் தனது ஜீவசக்தியை இலவசமாக வழங்கினார். இது மட்டுமல்லாமல், பஸ்காவை ஆயத்தம்பண்ண தனது சீஷர்களை அனுப்பிய நேரத்தி லிருந்து, அவர் தொடர்ந்து தூக்கம் இல்லாமல் தீவிரமான அழுத்தத்தில் இருந்தார். இந்த காலகட்டத்தில் பஸ்கா மற்றும் நினைவு கூருதலான இராப்போஜனம் ஆசரிக்கப்பட்டது தொடர்பான சோதனை அனுபவங்கள், கெத்செமனே பயணம், வியாகுலம் மற்றும் அங்கே பலவீனத்தின் மணிநேரங்கள், அதைத் தொடர்ந்து வந்த அனுபவங்கள், பிரதான ஆசாரியர்களால் ஆலோசனைச் சங்கத்தில் விசாரணை, ஏரோது மற்றும் பிலாத்துவுக்கு முன்பாக விசாரணை, வாரினால் அடிப்பித்தல் போன்றவைகள் அவருக்கு ஒரு தீவிரமான அழுத்தமாக இருந்தன.

யாருக்காக அவர் தம்முடைய பரலோக வாசஸ்தலத் தையும் மகிமையையும் தியாகம் செய்தாரோ, இப்போது அவர்களாலேயே சிலுவையில் அறையப்படுவதற்கான தண்டனையை அடைந்தார், கூடுதலாக அவர் தனது சொந்த சிலுவையைச் சுமக்க வேண்டியிருந்தது “**அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் ‘கபாலஸ்தலம்’ என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்.**” (யோவா. 19:17). அநேகமாக இறுதியாக, அவர் அதன் மிகுந்த எடைப்பளுவின் நிமித்தமாக, அவரது பலவீனம் அவரை நிறுத்தும் வரை சுமந்து சென்றிருக்கலாம் - ஏனெனில் மூன்று சுவிசேஷ விவரப் பதிவுகளும் உடன்நிற்கிறவர்களில் ஒருவர் உதவ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று கூறுகின்றன. (சிலுவையை முழுவதுமாகச் சுமப்பதின் மூலமாகவோ அல்லது இயேசுவின் பின்னால் நடந்து சென்று எடைப்-பளுவின் ஒரு பகுதியைச் சுமப்பதின் மூலமாகவோ என்பது குறித்து மூல வசனங்களில் தெளிவாகக் கூறப்படவில்லை).

பேதுரு, யோவான், யாக்கோபு, தோமா மற்றும் பிற அப்போஸ்தலர்கள் எங்கே இருந்தார்கள், அவர்கள் உதவி செய்ய முன்வரவில்லையா? ஒருவேளை அவர்கள் பயத்தால் பின்வாங்கியிருக்கலாம். ஆனாலும் என்ன சொல்வது, எப்பேர்ப்பட்ட ஒரு ஆசீர்வாதத்தை அவர்கள் இழந்தார்கள்! கட்டாயத்தின் பேரில் சிலுவையைச் சுமந்த சிரேனியன், அந்த நேரத்தின் அனுபவங்களால் உண்டான இரட்சகருடைய செய்தியின் சத்தியத்தை அவனுடைய இருதயத்தில் சுமந்ததின் மூலமாக, பின்னர் நசரேயனைப் பின்பற்றுபவர்களில் ஒருவரானார் என்று மரபு கூறுகிறது.

சுற்றிலும் பெண்கள் அழுது கொண்டிருந்தார்கள், அவர்களில் யாரும் உதவிக்கரம் நீட்டவில்லை என்பது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இயேசு அவர்களை நோக்கி, “**நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்**” என்றார். (லூக். 23:28). இது தொடர்பான எஜமானரின் வார்த்தைகளை 37 ஆண்டுகளுக்குப் பிறகு எருசலேமின் அழிவில் யூத ஜனங்கள் மீது வந்த மகா இக்கட்டின் ஒரு பகுதியை குறிப்பதாக சில வேதாகம மாணாக்கர்கள் கருதுகின்றனர். எருசலேமின் அழிவு, இந்த யுகத்தின் இறுதியில் ஏற்பட-விருக்கும் மகா இக்கட்டினை முன்னறிவித்த ஒரு அடையாளம் என்றும் கருதப்படுகிறது.

தங்களை மறைப்பதற்கும் பாதுகாப்பதற்கும், மலைகளையும் குன்றுகளையும் தேடுபவர்களைப் பற்றி இயேசு தொடர்ந்து பேசினார், “**அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள்மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக்கொள்ளுங்களென்றும் சொல்லத் தொடங்குவார்கள்.**” (லூக். 23:30). மலைகள் தங்கள் மீது விழும்படி யார் ஜெபிப்பார்கள் என்று நாம் கருதக்கூடாது; மாறாக, பொங்கி எழும் உபத்திரவங்களிலிருந்து பாதுகாக்கப் படவும் மறைத்துக்கொள்வதற்கும் பலர் தேடுவார்கள், விரும்புவார்கள் மற்றும் ஜெபிப்பார்கள் என்பதாக அதன் கருத்து தோன்றுகிறது. மலைகள் பூமிக்குரிய அரசாங்கங் களைக் குறிக்கின்றன, மேலும் சமுதாயத்தின் குன்றுகள் அதன் சமூக அமைப்புகளாகும், அவை ஒவ்வொன்றும் அதன் சொந்த உறுப்பினருரிமையைப் பாதுகாக்க முற்படு கின்றன. உண்மையாகவே, யூதர்கள் அரசாங்கங்கள் மற்றும் சமுதாயங்களின் பாதுகாப்பை நாடினர். அதே (மலைகள் மற்றும் குன்றுகளைப் பற்றிய) அதே வெளிப் பாடுகள் இந்த சுவிசேஷ யுகத்தின் இறுதிக்கும் பொருந்தும். அவரது இரண்டாவது வருகையின் போது (1874-ல் தொடங்கி), கிறிஸ்து அழிவுக்கேதுவான நியாயத்தீர்ப்பில் வெளிப்படுத்தப்படுவார், இதன் பலனாக தற்போதைய விஷயங்களின் ஒழுங்குமுறைகள் அழிக்கப்பட்டு, புதிய ராஜாவுக்கு வழி ஆயத்தம் செய்யப்படும்.

“**பச்சைமரத்திலே இவைகளைச் செய்தால், பட்ட-மரத்திலே என்ன செய்யமாட்டார்கள் என்றார்.**” (லூக். 23:31 ஆங்கில KJV). இங்கே அவர் யூத தேசத்தை, தம்முடைய சாபத்தினால் அல்லது தண்டனையினால் விரைவாக பட்டுப்போன அத்தி மரத்துடன் ஒப்பிடுவது போல் தெரிகிறது. எனவே, இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பு கழுதையின் மீது ஏறி எருசலே-முக்கு போய், அதற்காக அழுது, “**இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்**” என்று கூறினார். (மத். 23:38). இப்போது, மிகக் குறுகிய காலத்தில், அத்தி மரம் இன்னும் பச்சையாக இருந்தபோதே, அதன் ஆட்சியாளர்கள் ஒரு அவநம்பிக்கையான நிலையை அடைந்தனர், அதனால் அவர்கள் அனைத்து மனசாட்சியையும் ஒதுக்கி

**மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.**
**ஏசாயா 53:4**

வைத்துவிட்டு, அனைத்து நியாயப்பிரமாணங்களையும் மீறி, அவரை சிலுவையில் அறைவதற்கும் தயாராக இருந்தனர்.

பொல்லாப்பு இவ்வளவு சீக்கிரமாக நீதிக்கு எதிராக இத்தகைய கொடூரமான அக்கிரமத்தை செய்திருந்தால், பின்னர் எதைத்தான் எதிர்பார்க்காமல் இருக்க முடியும், உண்மையில் அந்த யூத அத்தி மரம் முற்றிலும் காய்ந்து அதன் அனைத்து சாரத்தையும் (ஜீவ சக்தியையும்) இழந்தபோது மெய்யாகவே நடந்தது என்ன? இஸ்ரயேல் இன்னும் தேவ தயவிலும் ஜீவ சக்தியுடனும் இருக்கும்போதே இஸ்ரயேலின் ஆட்சியாளர்கள் அத்தகைய அநீதியையும் பிரமாண மீறுதலையும் அனுமதிக்க முடிந்ததானால், புறஜாதி ஆட்சியாளர்களின் கைகளில் எவ்வளவு மோசமான செயல்பாடுகளை எதிர்பார்க்க முடியும். உதாரணமாக, பின்னர் எருசலேம் அழிக்கப்பட்டபோது, ரோமானிய இராணுவம் அதன் நூற்றுக்கணக்கான குடிமக்களை ஒரே நேரத்தில் சிலுவையில் அறைந்தது. மேலும், இயேசு பரமேறிய பிறகு, அப்போஸ்தலர்களுக்கும் ஆரம்பகால சபைக்கும் எதிராக மிகக்கொடூரமான குற்றங்கள் செய்யப்பட்டன.

இயேசு கொண்டிருந்த மென்மையான மன்னிக்கும் மனப்பான்மையைக் காட்டும் லூக்கா 23:34-ன் வார்த்தைகளை நாம் கவனமாகப் படிப்போமாக: “**பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்**”இந்த வார்த்தைகள் பழமையான கிரேக்க கையெழுத்துப் பிரதிகளில் காணப்படவில்லை. இருப்பினும், வேதாகமத்தின் எண் சாஸ்திரம் அடிப்படையில் இந்த வார்த்தைகள் உண்மையானவையாகும், மேலும் ஸ்தேவான் கல்லெறியப்பட்டபோது இதே உணர்வை வெளிப்படுத்தியதாகத் தோன்றுகிறது. “**அவனோ** (ஸ்தேவான்) **முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்**” (அப். 7:60). இது ஸ்தேவானுடைய ஜெயத்தின் உச்சக்கட்டமும், மரண பரியந்த உண்மைத்துவமுமாய் இருந்தது!

யூதர்களின் பாவம் தண்டனையைக் கொண்டுவரும் என்பதை இயேசு நிச்சயம் அறிந்திருந்தார். தேவன் அவர்களைத் தண்டித்து, அவர்களின் பட்டணத்தை சுட்டெரிப்பார் என்று அவர் தனது உவமையில் முன்னறிவித்திருந்தார். (மத். 22:7). “**உங்களுக்காக அழுங்கள்**” என்ற கூற்றின் சூழலானது, யூதர்கள் அவர்களுடைய பாவங்களுக்காக தண்டிக்கப்படுவதையும், மேலும் இந்த பாவம் அவர்களுக்கு முழுமையாக மன்னிக்கப்படாது என்பதையும் குறிக்கிறதாயிருக்கிறது. உண்மையில், யூதர்கள் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக (கி.பி. 33 முதல் கி.பி. 1878 வரை) தேவ தயவிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர் என்பதை நாம் அறிவோம். எனவே, இந்த தேவ ஏற்பாட்டைப் பொறுத்தவரை இயேசு பிதாவுடன் முழுவதும் இணக்கத்துடன் இருந்தார் என்றும், தேவனுடைய சித்தத்திற்கு முரணாக அவர்களுடைய இறுதியான மன்னிப்பைப் பற்றி அவர் பேசவில்லை என்றும் நாம் கருதுவது சரியானதா? ஆம், நிச்சயமாக சரியானது தான்.

பரிசுத்த பவுலும் இந்த விஷயத்தில், இயேசுவை நிராகரித்த பிறகு யூதர்கள் மீது வந்த உபத்திரவங்கள் பற்றி குறிப்பிடுகிறார். “**எப்படியெனில், சகோதரரே, யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகளை நீங்கள் பின்பற்றினவர்களாகி, அவர்கள் யூதராலே எப்படிப் பாடுபட்டார்களோ, அப்படியே நீங்களும் உங்கள் சுய ஜனங்களாலே பாடுபட்டீர்கள். அந்த யூதர்கள் கர்த்தராகிய இயேசுவையும், தங்கள் தீர்க்கதரிசிகளையும் கொலைசெய்தவர்களும், எங்களைத் துன்பப்படுத்தினவர்களும், தேவனுக்கேற்காதவர்களும், மனுஷர் யாவருக்கும் விரோதிகளுமாயிருந்து, புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் தடைபண்ணுகிறார்கள்: இவ்விதமாய் எக்காலத்திலும் தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள்: அவர்கள்மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது.**” (1 தெச. 2:14-16).

மறுபுறத்தில், யூதர்களுக்காகத் தம்முடைய ஜீவனைக் கொடுத்த இயேசுவானவர், யேகோவா தேவன் தம்முடைய பிரதிநிதியாகவும், தம்முடைய குமாரனாகவும், விசேஷமாக அனுப்பியிருந்தவரை கொன்ற மாபெரும் பாவத்திற்காக அவர்களுக்கு கிடைக்க வேண்டிய தண்டனையை அவர்கள் அனுபவிக்க விரும்பவில்லை என்பதை நாம் உறுதியாக நம்பலாம். அது வேண்டுமென்றே செய்யப்பட்டிருந்ததால், அத்தகைய பாவத்திற்குரிய நியாயமான தண்டனை சந்தேகத்திற்கு இடமின்றி முழுமையான அழிவாகவே இருக்கும். ஆனால் இயேசுவின் இரத்தம் உலகின் மீதமுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல், யூதர்களுக்குமான பாவ மன்னிப்பைக் குறித்தும் பேசுகிறது என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகிறார். கிறிஸ்து இயேசுவின் ஆயிரவருட யுக மத்தியஸ்த ஆட்சியின் போது தேவனுடன் ஒப்புரவாகுவதற்கான முழுமையான வாய்ப்பைப் பற்றி இது பேசுகிறது.

யூதர்கள் தங்களின் (குறைந்தபட்சம்) பகுதியளவு அறியாமையின் காரணத்தினால், அவர்களின் போக்கிற்கு முழுப் பொறுப்பாளிகள் அல்ல என்ற கருத்தை பரிசுத்த பேதுரு உறுதிப்படுத்துகிறார். பின்னர் அவர்களில் சிலரை நோக்கி அவர் இவ்வாறு கூறினார்: “**நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்**”; ஏனென்றால் அவர்கள் அறிந்திருந்தால், “**ஜீவாதிபதியை**” சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்கள் (அப்போஸ்தலர் 3:15-17). தேவனுடைய ஏற்ற காலத்தில் முழு உலகத்தினுடைய புரிந்து கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும் என்று சகரியா தீர்க்கதரிசி நமக்குக் காட்டுகிறார். அனைவரும் போதுமான அளவுக்கான வித்தியாசமான காரியங்களை காண்பார்கள், குறிப்பாக யூதர்கள் - அதாவது அவரைக் குத்தினவர்கள் - குறிப்பிடப்படுகிறார்கள். அப்போது கர்த்தர் அவர்கள் மீது ஜெபத்தின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார், அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்த்து, தங்களுடைய மிகச்




சிறந்த நண்பரான தங்கள் மீட்பரைத் துன்பப்படுத்தியதை உணர்ந்து அவருக்காகப் புலம்புவார்கள். இந்த வார்த்தைகளை கவனமாகப் படியுங்கள், “**நான்** (இயேசு) **தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்: அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.**” (சகரியா 12:10).

இயேசு மரித்துக்கொண்டிருந்தபோது, அவருடைய தையலில்லாத அங்கிக்காக சீட்டுப்போட்டு, அவருடைய மேல் வஸ்திரங்களை அவர்களிடையே பங்கிட்ட உண்மை நிகழ்வின் மூலமாக ரோமானிய வீரர்களின் இருதயக் கடினத்தன்மை சுட்டிக்காட்டப்படுகிறது. ஆயிரவருட ராஜ்யத்தின் பலனாக, கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, அதற்குப் பதிலாக சதையான இருதயத்தை கொடுப்பதாக தேவன் வாக்குத் தத்தம் அளித்துள்ளார் “**நான் அவர்களுக்கு ஏக இருதயத்தைத் தந்து, அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக்கொடுத்து, கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன்**” (எசே. 11:19). ஓ, ஆதாமிலும் பின்னர் மனிதனாகிய இயேசுவிலும் குறித்துக்காட்டப்பட்ட தேவனுடைய சாயலுக்கும் ரூபத்திற்குமான முழுமையான திரும்பக்கொடுத்தல் அனைத்து மனுக்குலத்திற்கும் எவ்வள வாய் தேவைப்படுகிறது!

சிலுவையின் மேலாக “**இவன் யூதருடைய ராஜா**” (லூக்கா 23:38) என்று எழுதி வைக்கப்பட்டிருந்த இயேசுவுக்கு இரு பக்கங்களிலும் ஒரே நேரத்தில் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்ட இரண்டு கள்ளர்களில் உலகத் தின் மனப்பான்மையானது குறித்துக்காட்டப்படுகிறது. இக்கட்டான நிலையில் இருந்த இந்த கள்ளர்களில் ஒருவன் இயேசுவை ஏமாற்றுக்காரர் என கேலி செய்து, தன்னையும் அவர்களையும் இரட்சிப்பதற்காக அவர் கொண்டிருந்த ஏதேனும் வல்லமையை வெளிப்படுத்தும்படி அவரை இகழ்ந்தான். இயேசு தன்னை இரட்சித்திருந்தால், அவர் உலகத்தின் இரட்சகராக இருந்திருக்க முடியாது என்பதை அவன் சிறிதும் உணரவில்லை!

மற்றொரு திருடன் இயேசுவின் நண்பனாகி, அவர் தகாததொன்றையும் நடப்பிக்கவில்லை என்றும், அநியாய மாக குற்றம் சாட்டப்பட்டதாகவும் அறிவித்தான். பின்னர், இயேசுவிடம் திரும்பி, தன்னுடைய அன்பான வார்த்தை களுக்கான வெகுமதியை கேட்டு அவர் மீதான தனது விசுவாசத்தை வெளிப்படுத்தினான். அவன், “**ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்**” (லூக். 23:42) என்றான். இயேசு தன்னை ஒரு ராஜா என்று கூறியிருந்ததை அந்தக் கள்ளன் அறிந்திருந்தான்; “**நீ ராஜாவோ?**” என்ற கேள்வி இயேசுவிடம் கேட்கப்பட்டபோது அவன் அருகில் நின்று கொண்டிருந்தான், மேலும் “**என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல**” என்ற பதிலையும் கேட்டிருந்தான் (யோவா. 18:36). இயேசு ஒரு ராஜாவாக இருக்கத் தகுதியானவர், அவர் மிகவும் உன்னதமான குணாம்சம் மற்றும் தோற்றமுடையவர் என்பதை கள்ளன் உணர்ந்திருந்தான். அவர் உண்மை யாகவே அவர் கோரியது போல் இருந்தாரானால் என்னவாகும்? கடைசியாக, மாபெரும் மறுமையில் இவரே மேசியாவாக நிரூபிக்க வேண்டும் என்றால் என்னவாகும்? அவர் குறைந்தபட்சம் சத்தியத்தை சொல்லி, அவனுக்கு ஆதரவாக ஒரு வார்த்தையை அறிவிப்பார், அவர் எப்போதாவது தனது ராஜ்ய அதிகாரத்தை அடைந்தால், குறைந்தபட்சம் அவருடைய அன்பு நிறைந்த நினைவுகளை அவன் கேட்கக்கூடும்.

இயேசுவின் பதில் கடந்த காலத்தில் நம் அனைவ ராலும் மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. ராஜ்யத்தில் அந்தக் கள்ளன் அதே நாளில் அவருடன் இருக்கும்படி அவர் வாக்குத்தத்தம் அளித்ததாக நாம் நினைத்தோம். ஆயினும், மற்ற வேதவாக்கியங் களின்படி, இயேசு தாமே அந்த நாளில் ராஜ்யத்தில் இல்லாமல், யோசேப்பின் புதிய கல்லறையில் தான் இருந்தார் என்பதையும்; அவர் மரித்தோரிலிருந்து, ஷியோலிலிருந்து, பாதாளத்திலிருந்து, கல்லறையிலிருந்து, மூன்றாம் நாள் வரை எழுந்திருக்கவில்லை என்பதையும்; அவர் உயிர்த்தெழுந்த பிறகும் கூட மரியாளிடம், “**நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை**”என்று கூறியதையும் (யோவா. 20:17) நாம் அறிவோம். அப்படி யானால், இயேசுவும் கள்ளனும் அதே நாளில் பரதீஸில் ஒன்றாக இருப்பார்கள் என்று அவர் அர்த்தப்படுத்தியிருக்க முடியாது என்பது தெளிவாகிறது.

ஆதாமினால் இழக்கப்பட்ட பரதீசும் இயேசுவினால் மீட்டெடுக்கப்பட்ட பரதீசும்! பெரும்பாலான ஜனங்கள் பரதீசு என்ற வார்த்தையைப் பார்க்கும்போது, மனதிற்கு முன்வைக் கும் சிந்தனை என்னவெனில், அது மிகவும் அழகாகவும், ரம்மியமாகவும் தோன்றும் ஒரு இனிமையான இடம், அதாவது மகிழ்ச்சியைக் கொண்டுவருவதற்கு உகந்த இடம் என்பதாயிருக்கிறது. நல்லது தேவனுடைய வார்த்தை மனுக்குலத்திற்கு வழங்கும் சிந்தனையும் இதுவேயாகும். யேகோவா தேவனுடைய ஏற்பாடு அத்தகைய இடத்தை வழங்குகிறது, அதை நாம் பூமி என்று அழைக்கிறோம்! மீட்டெடுக்கப்பட்ட மனுக்குலத்தின் குடியிருப்புக்காக பூமி பூரணப்படுத்தப்படுகிறது. ஆம், ஆதாமின் கீழ்ப்படியா மையால் ஆறாயிரம் வருடங்களுக்கு முன்பாக வீழ்ச்சியின் மூலம் இழக்கப்பட்ட பரதீசு, மேசியாவால் அவரது மகிமையான ராஜ்யத்தில் மீட்டெடுக்கப்பட உள்ளது. அந்த சமயத்தை தான், “**உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது**” நினைத்தருளும் என்று கள்ளன் கேட்டான். மேசியாவின் ராஜ்யம் வரும் காலத்திற்காகக் காத்திருக்கும் அந்தக் கள்ளன் அப்பொழுதிலிருந்து மரணத்தின் நித்திரையில்

**பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்: அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக் கிறவர்களாகவும் புறப்படுவார்கள். யோவான் 5:28,29**

"**இனிவரும் உலகில்,**" [ஆயிரவருட யுகத்திலுள்ள புதிய காரியங்களின் ஒழுங்குமுறையில்] (எபி. 2:5), **தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி, நீதி** [நீதியும் அன்பும், அநீதியும் வெறுப்பும் அல்ல] **வாசமாயிருக்கும்** "**புதிய வானங்களும்**" [புதிய மதசார்புள்ள ஆட்சி அதிகாரங்கள், கிறிஸ்துவும் சபையும்] **புதிய பூமியும்** [நீதியின் மீது மறுசீரமைக்கப்பட்ட மனித சமூகம்] **உண்டாகும்.**
**(2 பேதுரு 3:13)**

இருக்கிறான். இயேசுவின் பதில் இதற்கு முழுமையாக ஒத்துப்போகிறது: ஆமென். அப்படியே ஆகட்டும். "**இன்றைக்கு** (எனக்கு ஒரு நண்பன் இல்லாதது போல் தோன்றும் இந்த நாளில், எனக்கு ஒரு ராஜ்யம் கிடைப்பது சாத்தியமற்றதாக தோன்றும் இந்த நாளில், இன்று நான் உனக்குச் சொல்கிறேன்) **நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்**" (இன்னும் எதிர்காலத்தில் உள்ளது).

இயேசுவின் ராஜ்யம் நிலைநாட்டப்படும் போது, பாடுகள் நிறைந்த உலகத்தை ஒரு பரதீசாக மாற்றும் வேலை விரைவிலேயே துவங்கும். மேலும், மரணத்தின் நித்திரையி லுள்ள கோடிக் கணக்கானவர்களின் உயிர்த்தெழுதலில், அந்தக் கள்ளன் எஜமானரால் நினைவுகூரப்படுவான். சந்தேகத்திற்கு இடமின்றி, சிலுவையில் பேசப்பட்ட அவனது ஆறுதலான வார்த்தைகள் நிமித்தமாகவும், குறிப்பாக அந்த வார்த்தைகள் அவனுக்கு மென்மையான மற்றும் மனந் திரும்பும் இருதயம் இருப்பதைக் காட்டுகிறதினாலும், இப்படிப் பட்டவர்களே ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை முதலில் ஏற்றுக்கொள்பவர்கள் என்பதினாலும், பரதீசில் அவனுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம் கிடைக்கும். இயேசு சிலுவையில் அவனுக்கு அளித்த வாக்குத்தத்தத்தின் நிமித்தம், சுமார் 2,000 வருடங்கள் மரண நித்திரையிலிருந்த அவனது கண்கள் திறக்கப்பட்டு, தனது திரும்பக்கொடுத்தல் நாள் வரும்போது இந்த கள்ளன் கர்த்தரை எவ்வளவாய் துதிப்பான்.

இயேசு தம்முடைய சீஷனாகிய யோவானிடம் தனது தாயை அடைக்கலமாக ஒப்படைத்தது, கணவன் யோசேப்பு ஜீவனுடன் இல்லை என்பதைக் குறிக்கிறது. அநேகமாக, இது நமக்குக் காட்டும் மிகப்பெரிய பாடம் என்னவெனில், தனது உச்சகட்டமான துன்ப நேரத்திலும்கூட, தம்முடைய அன்புக் குரியவரின் நலனை அக்கறையோடு கருத்தில்கொண்ட எஜமானரின் விசாரிக்கும் சிந்தனைதான்.

"**என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?**" என்ற எஜமானரின் மரண நேர கதறல், அவர் தன்னை பரம பிதா என்று கூறவில்லை, மாறாக குமாரன் என்றே கூறினார் என்ற உண்மைக்கு சான்றாகும். இன்னும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்னவென்றால், பாவிகளின் தண்டனையை எஜமானர் எவ்வாறு முழுமை– யாக சகித்துக்கொண்டார் என்பதை இது நமக்குக் காட்டுகிறது. பாவத்தின் தண்டனை வெறுமனே மரிப்பது மட்டுமல்ல, தேவனுடனான ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப் படுவதுமாகும். பாவியின் ஸ்தானத்தை எடுத்துக்கொண்ட இயேசு, குறைந்தபட்சம் ஒரு கணமாவது பாவிகளின் அந்நியப்படுதலை முழுமையாக அனுபவித்திருக்க வேண்டும், அந்த நேரத்தில் அவருக்கு சிலவகையான நம்பிக்கை அளிக்கப்பட்டதால் தெளிவாக அவர் தனது அடுத்த சொற்றொடர்களை வழங்க முடிந்தது.

"முடிந்தது" (யோவா. 19:30) என்ற எஜமானரின் கூற்று, முந்தைய நாள் அவர், "**ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு** (மரணத்திற்குள்), **அது முடியுமளவும் எவ்வளவோ** (கடினமானதில்) **நெருக்கப்படுகிறேன்**" (லூக். 12:50) என்று கூறியதை நமக்கு நினைவூட்டுகிறது. இப்போது நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய குறிக்கோள் பணித் திட்டம் நிறைவேற்றப்பட்டு முடிந்தது. மரண தண்டனைக் குள்ளான ஆதாமின் சந்ததியை மீட்டுக் கொள்வதற்காகவே அவர் மரிக்க வந்தார். அவர் தம்முடைய கடைசி சுவாசத்தில், உலகத்தின் பாவங்களுக்கான தனது பலியின் வேலை முடிந்துவிட்டதாகக் கூறினார்.

"**பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்**" (லூக். 23:46) என்பது இயேசு தாம் உயிர்த்தெழுப்பப்படுவோம் என்ற நம்பிக்கையில் தம்– முடைய மனுஷீக ஜீவனை ஒப்புவித்தார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. அவர் தம்முடைய ஜீவனுக்கான உரிமையை இழக்கவில்லை, ஏனென்றால் அவர் எல்லாவற் றையும் தேவன் கட்டளையிட்டபடி பூரணமாக நிறைவேற்றி– யிருந்தார், இதற்கு மாறாக ஆதாம் தனது ஜீவனுக்கான உரிமையை இழந்திருந்தான். இயேசு கொண்டிருந்த ஜீவ ஆவி முந்தைய பரலோக நிலையிலிருந்து மாற்றப்பட்ட– தாயிருந்தது; இயேசுவை ஒரு மனிதனாகப் பிறக்க செய்வதில் தேவன் லோகோஸின் (Logos) ஜீவ தத்துவத்தைப் பயன்படுத்தினார். ஆகையால், இயேசு இன்னும் அதை தனது சொந்த ஜீவ ஆவியாகவும், ஜீவனுக்கான தனது சொந்த உரிமையாகவும் கூறலாம் – அதாவது, அது சிறிது காலத்திற்கு மட்டுமே ஒப்படைக்கப்பட்டது, அது மீண்டும் உயிர்த்தெழுதலில் அவருக்குக் கொடுக்கப்படும் என்ற தெய்வீக வாக்குத்தத்தத்தின் கீழ் மட்டுமே வைக்கப் பட்டிருந்தது. மனுஷீக ஜீவனுக்கான அவரது உரிமை மனுக்குலத்திற்கு அவர்களுடைய உயிர்த்தெழுதலில் வழங்கப்படும்.

இதன்படி, இயேசு மரிக்கும்போது, தனது ஜீவனுக் கான சிலாக்கியத்தை அல்லது உரிமையை பிதாவிடம் ஒப்படைத்து, அது என்னவாக வேண்டும் என்பது குறித்த பிதாவின் சித்தத்திற்கு முழுமையாக அர்ப்பணித்தார் என்பதை இந்தப் பகுதி குறிப்பிடுகிறது. மேலும், இயேசுவின் மனிதனாக வாழும் சிலாக்கியத்தை, அதாவது மனுஷீக ஜீவனுக்கான அவரது உரிமையை, சுவிசேஷ யுகத்தில் சபைக்கான மீட்கும் விலையாகப் பயன்படுத்துவதில் பிதா மகிழ்ச்சியடைந்தார், மேலும் அதை அவரது ஆயிரவருட யுக மத்தியஸ்த ஆட்சியில் உலகிற்காகப் பயன்படுத்துவார்.

சத்தியம் மிகவும் பகுத்தறியத்தக்கதாகவும், மிகவும்

ஆறுதலளிக்கக் கூடியதாகவுமிருக்கிறது, வேதவசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தை மரித்தோர்கள் மரித்த நிலையிலேயே இருக்கிறார்கள் என்று தெளிவாகக் கற்பிக்கிறது. தேவனுடைய வார்த்தை அனைவரும் உயிர்த்தெழுப்பப்படுவார்கள் என்றும் போதிக்கிறது. "**இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்: ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்: அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்த–வர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.**" (யோவா.5:28, 29 ASV). நம்முடைய இரட்சகரும், ஆண்டவரும், ராஜாவுமான கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு எல்லாப் புகழ்ச்சியும் உண்டாவதாக! "தேவன் அருளிய சொல்லிமுடியாத (அவருடைய அன்பின்) ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்." (2 கொரி. 9:15)! குறிப்பாக இந்த நினைவுகூருதலின் காலத்தில் நாம் பெற்றுக் கொண்ட அனைத்து நன்மைகளுக்காகவும் நாம் மிகவும் மகிழ்ச்சியடைவோமாக!

இது ஒரு கேள்வியை எழுப்புகிறது: உயிர்த்தெழுதல் என்ற இந்த சொல்லிமுடியாத ஈவை யார் பெற முடியும்? யேகோவா தேவனுடைய வார்த்தை பதிலளிக்கிறது: மரண நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளாக பிரதிஷ்டை செய்யும் வாய்ப்புடன் அனைவரும் எழுப்பப்படுவார்கள். கிறிஸ்தவர்கள் பல ஆண்டுகளாக பிரபலமான சுவிசேஷகர்கள் பெரிய அளவில் கூடாரக் கூட்டங்களை நடத்தியிருக்கிறார்கள்; அதில் அதிக அளவிலான எண்ணிக்கையில் கலந்து கொள்தலும், பல்லாயிரக் கணக்கான "மனமாற்றங்களும்" அறிவிக்கப்பட்டுள்ளன. சமீபத்திய ஆண்டுகளில் தொலைக்காட்சி–சுவிசேஷகர்கள் ஏராளமான பின்தொடர்பவர்களைச் சேகரித்துள்ளனர்; மேலும், வலைத்தளம், முகநூல், ஐஃபோன், மின்னஞ்சல் போன்றவற்றின் மூலம் சுவிசேஷம் விரிவாகப் பிரசங்கிக்கப்பட்டு, நம்முடைய உலகின் கிட்டத்தட்ட ஒவ்வொரு மூலையையும் சென்றடைகிறது, மேலும் ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்துவிடமாக மாற்றப்படுவதாகக் அறிவிக்கப்படுகிறது: அதாவது, கிறிஸ்தவர்களாக மாற்றப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. பியூ ஆராய்ச்சி மையத்தின் (Pew Research Center) சமீபத்திய தரவுகளின்படி, உலக மக்கள் தொகையில் சுமார் 31.6 சதவீதம் பேர் கிறிஸ்தவர்களாக அடையாளம் காணப்படுகிறார்கள், இருப்பினும், இந்த மதமாற்றங்களில் பலர் பெயரளவில் மட்டுமே கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

கிறிஸ்தவர்களாக மாறுவதற்கான முயற்சிகளில் மனுக்குலத்தின் பெரும்பகுதியினர் போராடுகிறார்கள்! ஆம், கிறிஸ்தவராக மாறுவதற்கு, உலகத்தையும், அதன் காரியங்களையும், அதன் நேசத்தையும், அதன் நம்பிக்கைகள் மற்றும் லட்சியங்களையும் விட்டு வெளியேறி, கர்த்தருடைய ஊழியத்தில் மரணம் வரை செலவிடவும், செலவிடப்படவும், ஒருவர் உறுதியானதும் நேர்மறையானதுமான பிரதிஷ்டை செய்வது எதிர்பார்க்கப்படுகிறது. ஜீவியத்தைப் பொறுத்த–வரை ஒரு நேர்மறையான முடிவெடுப்பதின் மதிப்பை நாம் மிகைப்படுத்தி மதிப்பிட முடியாது. முடிவெடுப்பதில் உள்ள குறைபாடுகளினால், பல்லாயிரக்கணக்கான ஜீவன்கள் பறிபோகின்றன. தேவன் மீதான நேர்மறையான தன்மை மட்டுமே "**உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்குவதற்கு**" நாம் நம்பக்கூடிய ஒரே நிபந்தனையாயிருக்கிறது. குறிப்பாக மனந்திரும்புதல் மற்றும் நீதிமானாகுதலுக்கான படிநிலைகளை மேற்கொண்டவர்களை, உட்கார்ந்து பிரதிஷ்டைக்கான செல்லும் செலவைக் கணக்கிடவும், அவ்வாறு செய்த பிறகு, "மெய்யான சீஷர்களாக" அதாவது உண்மையான கிறிஸ்தவர்களாக மாறுவதற்கு தீர்மானித்துக் கொள்ளும்படி நாங்கள் ஊக்குவிக்கிறோம். லூக். 14:27, இந்த நிலையை மிக அழகாகக் குறிப்பிடுகிறது: "**தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.**"

இயேசுவானவர் – கிறிஸ்துவின் சீஷர்களாக தங்கள் சிலுவையை எடுத்துக் கொண்ட பிறகு, அதை நிச்சயமாக சுமந்து, அவரைப் பின்பற்ற வேண்டும் என்று கூறுகிறார் அதாவது, இறுதிவரை அவரை உண்மையாகப் பின்பற்ற வேண்டும் என்று கூறுகிறார். சிலுவையை சுமப்பதென்பது நமது சோதனைகளிலிருந்து தப்பி ஓடுவதையோ அல்லது அவற்றைக் கண்டு பதட்டமடைவதையோ அர்த்தப்படுத்துவதில்லை. நாம் அவற்றை மகிழ்ச்சியுடன் சகித்துக்கொள்ள வேண்டும். சிலுவையைச் சுமப்பது ஒரு அனுதின விஷயமாயிருக்கிறது, அது தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளின் குணாதிசய வளர்ச்சிக்கான வழியாகவுமிருக்கிறது. நம்முடைய சிலுவையைச் சுமக்கும் போது, எஜமானர் வெளிப்படுத்திய ஒரே சரியான உணர்வு: "**என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது**" என்பதேயாகும். இயேசு என்னைப் பின்பற்றி வா என்று சொல்லும்போது, இயேசுவை நாம் எப்படி பின்தொடர்கிறோம்? நாம் அவரை எப்படிப் பின்பற்றுகிறோம்? நாம் அவரையே நம்முடைய முன்மாதிரியாக்குவோமாக; மேலும் "**உன் கால்நடையைச் சீர்தூக்கிப்பார்: உன் வழிகளெல்லாம் நிலைவரப்பட்டிருப்பதாக.**" (நீதி. 4:26). சங்கீதக்காரனாகிய தாவீது இவ்வாறு எழுதினார், "**துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**" (சங். 1:1, 2).

உண்மையான கிறிஸ்தவர்களாகிய நாம் எப்போதும் இதை மனதில் கொள்ள வேண்டும்: "**கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்.**" (1 பேது. 2:21). அவருடைய வழிநடத்தலை நாம் கவனமாகப் பின்பற்றினால், அவர் நம்முடைய மேய்ப்பராகத் தொடர்ந்து நம்மை பராமரிக்கிறார் என்பதை அறிந்து கொள்வது எவ்வளவு ஆறுதலளிக்கிறது! கிறிஸ்தவர்கள் தனது எந்த அனுபவத்தையும் ஒருபோதும் அதிர்ஷ்டம் அல்லது துரதிர்ஷ்டம் என்று கருதக்கூடாது, ஆனால் அவன் கர்த்தருக்கு நெருக்கமாக வாழ்ந்தால், அவனைப் பற்றிய விஷயங்கள் அனைத்தும் அவரால் கட்டளையிடப்பட்டு வழிநடத்தப்படுகின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். "**நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால்**

**உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.**'' (சங். 37:23). பாதையானது எப்போதும் முட்கள் நிறைந்ததாகவும், குறுகலாகவும், பாறைகள் நிறைந்ததாகவும் இருந்தாலும், தேவனுடைய வழியே சிறந்தது என்பதை அவன் அறிவான்.

யேகோவா தேவன் தம்முடைய சத்திய வார்த்தையில் காலத்தைக் குறித்ததான தீர்க்கதரிசனத்தை வழங்கியுள்ளார்! மாற். 13:33 போன்றதான தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றத்தை நோக்கி யுகங்கள் முழுவதும் விழித்திருந்து கவனிக்கிறவர்கள் காத்திருக்கிறார்கள், ''**அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையா யிருங்கள், விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்.**'' 1914-ல் தொடங்கிய தற்போதைய மகா உபத்திரவக் காலம், ''**உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததுமான மிகுந்த உபத்திரவமாகும்.**'' (மத். 24:21). ''**பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும்** (மனித சமுதாயத்தின் அமைதியற்ற மற்றும் ஒழுங்கற்ற கூறுகள்) **முழக்கமாயிருக்கும்** (தற்போதைய சமுதாய ஒழுங்குமுறைகளாகிய அரண்களுக்கு எதிராக தாக்குதல்கள் மற்றும் பொங்கி எழுதல்கள்); **பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்**'' (லூக். 21:25,26). சங். 107:27 இவ்வாறு அறிவிக்கிறது ''**வெறித்தவனைப்போல் அலைந்து தடுமாறுகிறார்கள்; அவர்களுடைய ஞானமெல்லாம் முழுகிப்போகிறது.**''

அப்போஸ்தலர் 3:19-21-ல் உள்ள மாபெரும் வாக்குத்தத்தம்: ''**ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். உலகத் தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் இழந்து போனதைத் திரும்பக் கொடுக்கும் காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்.**'' (ஆங்கில வேதாகமம் பார்க்கவும்). உலகத்தை மாற்றுவதற்கான தற்கால முயற்சிகளின் வரையறுக்கப்பட்ட பலன்களுக்கு மாறாக, அப்போது (வரவிருக்கும் காலத்தில்) கிறிஸ்துவும் அவருடைய சபையும் பூமியின் மீதும் மனிதர்கள் மத்தியிலும் தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்கள், அதன்பிறகு ''**பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுது கொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர்**'' (சங். 22:27, 28), ஏனெனில் அப்பொழுது அது உலகத்தின் மனந்திரும்புதலுக்கான தேவனுடைய ஏற்ற காலமாக இருக்கும்.

ஏசாயா 35-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது போன்ற தீர்க்கதரிசனங்களில், வல்லமை மற்றும் அழகின் வெளிப்பாடுகளும், ஏசாயா 65:17 மற்றும் சங்கீதம் 67 போன்றவைகளில் விசுவாசமுள்ள இருதயம் மகிழ்ச்சியான எதிர்பார்ப்பில் உயர்த்தப்பட்டு, மகிமையான எதிர்கால வாய்ப்பிற்காக தேவனைத் துதிக்கிறதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த பொல்லாத நாளில் உலகத்தை இப்போது சூழ்ந்து கொண்டிருக்கும் உபத்திரவத்தின் புயல்-மேகங்களுக்கு அப்பால், தீமையை அழித்து முழு மனுக்குலத்தின் ஆசீர்வாதத்திற்குமான தேவனுடைய அனைத்து வாக்குத்தத்தங்களின் மகிமையான நிறைவேற்றம் மேசியாவின் பிரசன்னத்திலிருந்து எவ்வாறு வரும் என்பதைக் குறித்து நாம் ஒருபோதும் அறிந்திருக்க முடியாத விஷயங்கள், காலத்தால் அழியாத கிருபையின் வார்த்தைகளால் நமக்குக் கூறப்பட்டிருக்கிறது.

தேவனுடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களுக்காக அவருக்கு நன்றி! அவருக்கு பயபக்தியாயிருத்தலே ஞானத்தின் ஆரம்பம், எனவே நாம் அவரை வணங்கி தொழுது கொள்ளுவோமாக. நம்முடைய சிருஷ்டிகராகிய கர்த்தருக்கு முன்பாக ஜெபத்தில் முழங்காற்படியிடுவோமாக: ''**நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்.**'' (சங். 95:6).

***




Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

# Laymen's Home Missionary Movement

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**